பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 31, சனிக்கிழமை 16.09.2017 கதிர் 314

## இந்தியா செல்ல முன்னர் மஹிந்த சீனா செல்வார்

கொழும்பு, செப். 16

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடுத்த மாதம் புதுடில்லிக்குச் செல்லவிருக்கையில் அதற்கு முன்னர் அவரை பீஜிங்கிற்கு அழைத்திருக்கிறது சீனா.

மஹிந்த ராஜபக்ஷவை அடுத்த மாதம் 14ஆம் திகதி டில்லிக்கு அழைத்து, அவருடன் பேச்சு நடத்தி கொழும்பு அரசுக்கு எச்சரிக்கை விடுப்பதற்குரிய திட்டத்தை இந்தியாவே ஆரம்பத்தில் வகுத்திருந்தது.

பக்கம் 18 >>>

# 20 ஆவது திருத்த அரசியல் நெருக்கடி; ஜனாதிபதி - பிரதமர் மந்திராலோசனை

## நேற்றிரவு நடைபெற்றது



கொழும்பு, செப்ரெம்பர் 16

இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தை முன்னெடுப்பதாயின் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்ற உயர் நீதிமன்றத் தீர்ப்பினால் எழுந்துள்ள அரசியல் நெருக்கடி குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தமது அரச உயர் மட்ட சகாக்களோடு நேற்றிரவு மந்திராலோசனை நடத்தினர் என அறியவந்தது.

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளிலும் இருபதாவது அரசமைப்புத் திருத்த நடவடிக்கைகளிலும் சம்பந்தப்பட்டவர் என்ற முறையில் இந்த மந்திராலோசனைக் கூட்டத்துக்கு கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பியும் அழைக்கப்பட்டிருந்தார் என அறியவந்தது.

பக்கம் 18 >>>

## கிழக்கு மாகாண சபைத் தேர்தல்; தமிழ், முஸ்லிம் கட்சிகள் பரபரப்பு

### திடீர் தகவலால் தடுமாற்றம்; கூட்டணி வியூகங்கள் குறித்து ஆராய்வு

திருமலை, செப்.16

இருபதாவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினால் அந்தத் திருத்தம் நடைமுறைக்கு வருவது சாத்தியமற்றது என்ற நிலைமை ஏற்பட்டுள்ளமையை அடுத்து -

கிழக்கு மாகாண சபை உட்பட மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல் அறிவிப்பு அடுத்த மாத முற்பகுதியில் வெளிவருவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது என்ற செய்தி நேற்று பகிரங்கமானது.

இதனால் கிழக்கு மாகாண சபையைக் குறிவைத்துச் செயற்படும் தமிழ், முஸ்லிம் கட்சியினரை நேற்றே தேர்தல் பரபரப்புத் தொற்றிக் கொண்டதாக

பக்கம் 18 >>>

## கிழக்கில் நான்கு தமிழ்க் கட்சிகளும் கூட்டமைப்பாகக் குதிக்கவே ஆர்வம்

### ஈ.பி.ஆர்.எல்.எவ். கூடி முடிவெடுக்கும் என்கிறார் சுரேஷ்

யாழ்ப்பாணம், செப்.16

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் உடனடியாக அறிவிக்கப்படும் நிலைமை ஏற்பட்டடுள்ள சூழலில் -

அந்தத் தேர்தலை வழமைபோல தமிழ்க் கூட்டமைப்பு என்ற கட்டமைப்பில் எதிர்கொள்வதற்கே அதில் அங்கம் வகித்துள்ள நான்கு கட்சிகளும் பெரும் விருப்பம் தெரிவித்துள்ளன.

எனினும் -

இத்தேர்தல் தொடர்பில் எத்தகைய போக்கைக் கையாள்வது என்பது சம்பந்தமாக ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி கூடி ஆராய்ந்து தீர்மானிக்கும் என்றார் அதன் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன்.

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) இந்தத் தேர்தலை வழமைபோல கூட்டமைப்பு என்ற கொடியின் கீழ் எதிர்கொள்ளும் என்றார்

பக்கம் 18 >>>

## தமிழர்களின் தாயகம் எங்கும் தியாகி திலீபன் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், செப்.16

சாகும் வரை உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று தமிழர் தாயகம் எங்கும் உணர்வெழுச்சியுடன் ஆரம்பமாகின.

திலீபன் தனது உண்ணாநோன்பை ஆரம்பித்த தினத்தின் 30ஆவது ஆண்டு நினைவு நேற்றாகும்.



அதனை ஒட்டிய நிகழ்வுகளில் தமிழ் மக்கள் அமைதியாகவும் அதே நேரம் உணர்வுபூர்வமாகவும் ஈடுபட்டனர்.

நல்லூரில் தியாகி திலீபன் உண்ணாநோன்பிருந்து உயிர்துறந்த புனித இடத்தில் - யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பின் வீதியில் - விசேட

பக்கம் 18 >>>

## சர்வதேச நீதிபதிகள் முன் இராணுவத்தை நிறுத்துவதற்காகவே புதிய சட்டமூலமாம்

### பயங்கரமான ஏற்பாடு என்கிறார் பீரிஸ்

கொழும்பு, செப். 16

வலிந்து காணாமலாக்கப்படுவதைக் குற்றமாக்குதல் என்ற பெயரில் ஒரு சட்டமூலம் 21ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு வருகின்றது. நமது இராணுவத்தினரை சர்வதேச நீதிபதிகளின் முன்நிறுத்துவதற்கு வழி செய்யும் பயங்கரமான ஏற்பாடே இது.

- இவ்வாறு கூறியுள்ளார் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ்.

பொரளையில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதை குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பிலான அலு

பக்கம் 18 >>>

## 2020இல் அரச ஊழியர்களின் சம்பளம் பல மடங்காகுமாம்!

### அமைச்சர் வஜிர அபேவர்த்தன கூறுகிறார்

கொழும்பு, செப்.16

அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வின் பிரகாரம் 2020ஆம் ஆண்டளவில் அரச ஊழியர்களுக்கான சம்பளம் பன் மடங்காக அதிகரிக்கும் என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

இதன்படி விசேட வைத்திய நிபுணர்களின் அடிப்படை சம்பளம் 1 இலட்சத்து

பக்கம் 18 >>>

## புதிய நான்கு மேஜர் ஜெனரல்கள்

கொழும்பு, செப்.16

இலங்கை இராணுவத்தின் நான்கு பிரிகேடியர்கள் மேஜர் ஜெனரல்களாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் பதவி உயர்த்தப்படவுள்ளனர்.

கே.ஏ.பீ.கே.ரத்நாயக்கா, கே.ஏ.டீ.எஸ்.எல்.பெரேரா, ஐ.பீ.ரணசிங்க, இராணுவ ஊடகப் பேச்சாளர் ஏ.டபிள்யூ. ரொஷான் செனிவிரத்ன ஆகியோரே புதிய மேஜர் ஜெனரல்களாகப் பதவி உயர்வு பெறுகின்றனர். (உ)

## இலங்கையில் அமெ. விமானப்படை நடத்தும் ஒத்திகைப் பயிற்சியில் 13 நாட்டுப் படையினர்!






கொழும்பு, செப்.16

இந்தோ-ஆசிய-பசுபிக் பிராந்திய விமானப் படைகளுக்கிடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில், அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தின் ஏற்பாட்டில், 2017 என்ற விமான ஒன்றுகூடல் மற்றும் பயிற்சி இலங்கையில் நடைபெற்றுவருகிறது.

நீர்கொழும்பில் உள்ள ஜெட்விங் புளூ விடுதியில் கடந்த 11ஆம் திகதி ஆரம்பமாகிய இந்த ஒன்றுகூடல் மற்றும் பயிற்சி, இன்று வரை தொடர்ந்து இடம்பெறுகிறது. மனிதாபிமான உதவி, அனர்த்த நிவாரணம் நடவடிக்கைகளில் பிராந்திய நாடுகளுக்கிடையில் ஒத்துழைப்பை

பக்கம் 18 >>>

காலைக்கதிர் Kalaikkathir



# புத்தூர் மக்களின் போராட்டத்துக்கு தீர்வு கோரி யாழில் கவனவீர்ப்பு!







யாழ்ப்பாணம், செப். 16

கடந்த 65 நாள்களாக புத்தூர் மேற்கு கலைமதி கிராம மக்கள் மேற்கொண்டு வரும் சத்தியாக்கிரகப் போராட்டத்திற்குத் தீர்வை வழங்கக்கோரி நேற்று யாழில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது.

இந்தப் போராட்டம் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, குடியிருப்புகளுக்கு மத்தியில் உள்ள மயானங்களை அகற்றுமாறும், மக்களின் வாழ்விடச் சூழலைப் பாதுகாத்து கிராமியக் கட்டமைப்பை வலுப்படுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்தப் போராட்டத்தில் அரசியல்கட்சிகள், சமூக அமைப்புகள், தொழிற் சங்கங்கள், வர்த்தகர் சங்கங்கள், இளைஞர் அமைப்புகள், விளையாட்டுக் கழகங்கள், மாணவர் அமைப்புகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.







## நல்லூரில் திலீபனின் நினைவு தினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு!

கொழும்பு, செப். 16

சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த திலீபனின் 30ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் நேற்று யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பின் வீதியில் உள்ள தியாகி திலீபனின் நினைவிடத்தில் நடத்தப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி இணைந்து இந்த நினைவுகூரலை நடத்தியுள்ளன.

இந்த நினைவுகூரலில் முன்னாள் போராளிகள், பொது மக்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலிகளை செலுத்தினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ். பல்கலையில் நேற்றுக்காலை தியாகி திலீபனின் நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், செப். 16

யாழ். பல்கலைக்கழகத்தில் தியாக தீபம் திலீபனின் 30 ஆம் ஆண்டு நினைவு நாள் உணர்வு பூர்வமாக நேற்றுக் காலை அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவுச்சுற்றுவட்டத்தில் தியாகி திலீபனின் உருவப்படம் வைத்து, அந்தப் பகுதிகள் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

இந்த இடத்தில் பெருந்திரளாகக் குழுமிய பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் கல்விசார்-கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தியாக தீபத்தின் உருவப்படத்திற்கு ஈகச் சுடரேற்றியும் மலர்தூவியும் தமது அகவணக்கத்தைச் செலுத்தினர்.





இதேவேளை, திலீபன் உண்ணாவிரதமிருந்த பன்னிரண்டு நாள்களும் யாழ். பல்கலைக் கழகத்தில் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்படும் என்று மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

திலீபன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் பழைய மாணவராவார்.

## லலித் வீரதுங்க, பெல்பிட்ட ஆகியோருக்காக பிண்ட பாத்திரம் ஏந்தி வீதிக்கு வந்த பிக்குகள்!

கொழும்பு, செப். 16

லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்கு விதிக்கப்பட்டுள்ள அபராதத் தொகையைச் செலுத்துவதற்காக பிக்குமார் பிண்ட பாத்திரம் ஏந்தி நிதி சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத் தொடர்பு பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட ஆகியோர் முறைகேடான வகையில் சில் துணிகள் விநியோகம் செய்தனர் என்ற குற்றச்சாட்டில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்குத் தலா 5 கோடி ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. இந்த அபராதத் தொகைக்கான நிதி சேகரிப்புக்காக பிக்குமார் பிண்ட பாத்திரம் ஏந்தி நிதி சேகரிக்கும் நடவடிக்கையை நேற்று ஆரம்பித்துள்ளனர்.



கோட்டை சம்புத்தாலோக விகாரையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த பிண்ட பாத்திரம் ஏந்தும் நிகழ்வில் கலந்துகொண்ட பிக்குமார், கோட்டை ரயில் நிலையம் வரை நடந்து சென்று நிதி சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களுடன் கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் நிதி சேகரிப்பு யாத்திரையில் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

★ கிழக்கு ★ வடமேல் ★ சப்பிரகமுவ

# 3 மாகாண சபைகளுக்கும் தேர்தல் டிசெம்பரிலேயே நடத்த முடியும்!

## நேற்றிரவு அரச உயர் மட்டத்தின் மந்திராலோசனையில் தெரிவிப்பு

கொழும்பு, செப்ரெம்பர் 16

இந்த மாத இறுதியோடு பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்யும் கிழக்கு மாகாண சபை, வடமேல் மாகாண சபை சப்பிரகமுவ மாகாண சபை ஆகியவற்றுக்கான தேர்தல்களை, இருபதாவது அரசமைப்புத் திருத்தம் மூலம் தள்ளிப்போடும் அரசின் முயற்சியை உயர்நீதிமன்றத்தின் பரிந்துரை சிதறடித்துவிட்டதால், அத் தேர்தல்களை இனி எப்போது நடத்துவது என்பது குறித்து அரசுத் தலைமை நேற்றிரவு மந்திராலோசனை நடத்தியது.

அந்தத் தேர்தலை, தேர்தல் ஆணையகம் நினைத்தால் டிசெம்பர் ஆரம்பத்திலேயே நடத்தி முடிக்கலாம் என்று நேற்றிரவு நடந்த அரசுத்தரப்பின் உயர்ம ட்ட மந்திராலோசனைக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது என நம்பகரமாக அறியவந்தது.

மேற்படி மூன்று மாகாண சபைகளின் பதவிக் காலமும் முடிந்த கையோடு – அடுத்த மாதம் முதல் வாரத்தில் – புதிய தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்படுமானால் –

எதிர்வரும் டிசெம்பர் முதல் வாரத்தை ஒட்டி – ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை டிசெம்பர் 12 ஆம் திகதி ஆரம்பமாவதற்கு முன்னர் – அந்த மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி முடித்து விட முடியும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

மூன்று மாகாண சபைத் தேர்தல்களையும் டிசெம்பரில் நடத்தினால், நாடளாவியரீதியில் உள்ளூராட்சித் தேர்தலை ஜனவரி மூன்றாம் வாரத்தில் நடத்தி முடிக்கக் கூடியதாக இருக்கும் என்றும் நேற்றைய கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

எது, எப்படியென்றாலும், தேர்தல்களை நடத்தும் தினங்களையும், காலங்களையும் தீர்மானிக்கும் பொறுப்பு தனித்து தேர்தல் ஆணையகத்துக்கு உரியது என்பதால், அதனைத் தேர்தல் ஆணையகம் செய்வதற்கு இடமளித்து உதவுவது என்றும் –

உரிய தேவையான அவதானிப்புகள், தகவல்களை மட்டும் தேர்தல் ஆணையகம் கோரும் போது அரசுத் தலைமை வழங்க வேண்டும் என்றும் – நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அறியவந்தது. (உ)

# உயர்நீதிமன்றின் பரிந்துரையில் போதிய விளக்கமில்லையாம்!

## அரச உயர் பீடம் விசனம் தெரிவிப்பு

அரசமைப்புக்கான இருபதாவது திருத்தத்தை நிறைவேற்றுவதாயின் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களின் அனுமதியையும் பெறவேண்டும் என்ற தனது தீர்ப்பை அறிவித்திருக்கும் உயர் நீதிமன்றம், தனது முடிவுக்கான காரணங்களை அந்தத் தீர்ப்பில் முன்வைக்கவில்லை என்று அரசின் உயர் தலைவர் ஒருவர் விசனத்துடன் நேற்றுக் கருத்துக் கூறினார் என அறியவந்தது.

16 பக்கத்தில் அந்தத் தீர்ப்பு அமைந்துள்ளது.

மக்களின் வாக்குரிமை மற்றும் இறைமை ஆகியவற்றோடு சம்பந்தப்பட்ட அரசமைப்பின் 3ஆவது உறுப்புரையை இந்தத் திருத்தம் அப்பட்டமாக மீறுவதாகவும், ஆகவே இதனை நிறைவேற்றுவதாயின் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களின் அனுமதியைப் பெறுவது அவசியம் எனவும் இந்தத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், எத்தகைய முறையில் இந்த அரசமைப்புத் திருத்தம் மூன்றாவது உறுப்புரிமையை மீறுகின்றது என்பது இத் தீர்ப்பில் விவரிக்கப்படவேயில்லை என அரசின் உயர் தலைவர் ஒருவர் நேற்றிரவு ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற மந்திராலோசனைக் கூட்டத்தில் விசனித்தார்.

வழக்கமாக அரசமைப்புத் திருத்தம் ஒன்றுக்கான பரிந்துரையை முன்வைக்கும் எந்த உயர் நீதிமன்றமும் தனது முடிவுக்கான காரணங்களை விலாவாரியாக எடுத்தியம்பியே வந்துள்ளன என்றும் –

ஆனால் இந்தத் தடவை மட்டும் புதிய விளக்கங்கள், வியாக்கியானங்கள் வைக்கப்படவே இல்லை என்றும் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் கவலை வெளியிட்டன என்று கூறப்பட்டது. (உ)

# 21ஆம் திகதி தொழிற்சங்கங்கள் பல நாடு தழுவிய வேலை நிறுத்தம்

சகல தொழிற்சங்கங்களையும் ஒன்றிணைத்து எதிர்வரும் 21ஆம் திகதி நாடுதழுவிய பாரிய வேலை நிறுத்த போராட்டத்தைத் தாங்கள் முன்னெடுக்கவுள்ளனர் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் போராட்டத்தை ஒட்டி 'வாகன' பேரணிகள் கொழும்பு நகரை நேற்று வந்தடைந்த பின்னர் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் கல்வி, சுகாதாரம் என சகல துறைத் தொழிற்சங்கங்களும் இணையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கவிதைத் தொகுப்பு வெளியீடு நாளை

க.சட்டநாதன் எழுதிய 'நீரின் நிறம்' கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். ஆரிய குளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. இந்த நிகழ்வின் தொடக்கவுரையை சி.ரமேஸும், தலைமையுரையை கவிஞர் சோ. பத்மநாதனும், மதிப்பீட்டுரைகளை ந.சத்தியபாலன் மற்றும் தி.செல்வ மனோ கரனும், ஏற்புரை, நன்றியுரையை நூலாசிரியரும் ஆற்றுவர்.

# வவுனியா வர்த்தக சங்கத் தலைவரை பிணையில் விடுக்க நீதிமன்று அனுமதி

வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் ரி.கே.இராஜலிங்கம் நேற்று நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 31ஆம் திகதி வியாழக்கிழமை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த போது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இளைஞர் ஒருவர் கனடா செல்வதற்காக முகவர் ஒருவருடன் தொடர்பை ஏற்படுத்தியுள்ளார். அந்த முகவர் வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் ரி.கே. இராஜலிங்கத்தின் வங்கிக் கணக்கிற்கு அந்த இளைஞரின் வெளிநாடு செல்வதற்கான பணத்தை வைப்புச் செய்யுமாறு கோரியுள்ளார்.

அந்த இளைஞனும் அவ்வாறே வைப்புச் செய்த நிலையில், முகவரால் வெளிநாட்டுக்கு அனுப்பப்படாது ஏமாற்றப்பட்டுள்ளார். இதனையடுத்து அந்தப் பணத்தை மீளபெறுவதற்கு இளைஞர் முயற்சிகளை மேற்கொண்ட போதும் அது பயனளிக்காமையால் கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அந்த முறைப்பாடு தொடர்பில் வவுனியா வர்த்தக சங்கத் தலைவரை நீதிமன்றில் ஆஜராகுமாறு அவருக்கு நீதிமன்றத்தால் அழைப்புக் கட்டளை அனுப்பப்பட்டிருந்த நிலையில், அவர் ஆஜராகாமையால், இந்தியாவில் இருந்து அவர் இலங்கை வந்த போது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று அவரது வழக்கு விசாரணைக்கு வந்த போதே இரண்டு பேரின் சரீரப் பிணையில் அவர் செல்வதற்கு நீர்கொழும்பு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

எதிர்வரும் டிசம்பர் 12 ஆம் திகதி மீண்டும் இந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது.

# காணிகளை மீட்டுத்தருமாறு கைவேலி மக்கள் கோரிக்கை





முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு கைவேலி பிரதேசத்தில் முன்னாள் போராளிக் குடும்பங்கள் மற்றும் மாவீரர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட 25 வீட்டுத்திட்ட பகுதிக் காணிகளை மீளக் கையளிக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிக்கு நேற்று மாகாண சபை உறுப்பினரையும் அழைத்துக்கொண்டு சென்ற மக்கள் தமது காணிகளிலிருந்த வீடுகள், கிணறுகள் மற்றும் மலசல கூடங்கள் என்பவை அழிக்கப்பட்டுள்ளன எனக் கவலை வெளியிட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு கைவேலி பிரதேசத்தில் 2000 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் போராளிக் குடும்பங்கள் மற்றும் மாவீரர் குடும்பங்களிற்கு காணிகள் வழங்கப்பட்டு, 2006 ஆம் ஆண்டு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

எனினும் கடந்த 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதி யுத்தத்தை தொடர்ந்து இடம்பெயர்ந்து சென்ற மக்கள் மீண்டு வந்து தமது காணிகளைச் சென்று பார்வையிட்டபோது, அந்தப் பகுதிகளுக்குச் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கும், இராணுவத்தினரின் அறிவித்தல் பலகை காணப்பட்டனவாம். இந்த நிலையில் தாம் முன்னாள் போராளிகளாக இருந்தமையால் அச்சம் காரணமாக திரும்பிச் சென்றனர் எனத் தெரிவிக்கும் அந்த மக்கள், தற்போது இராணுவத்தினர் வெளியேறியுள்ள நிலையில் அந்தக் காணிகளை வனவளப் பாதுகாப்பு பிரிவினர் கையகப் படுத்தியுள்ளனர் எனத் தெரிவித்தனர்.

இந்த நிலையில் தற்போது வறுமைக்கோட்டின் கீழ் தாம் வாழ்ந்து வருகின்றனர் எனவும், எனவே தமது காணிகளை மீட்டுத் தருமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை இந்தப் பகுதியை பார்வையிட்ட வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரனிடம் மக்கள் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர். மகஜரைப் பெற்றுக் கொண்ட ரவிகரன், இந்த விடயத்தை முதலமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்வார் எனவும் வருகின்ற மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்திலும் கலந்துரையாடி அவர்களது காணிகளை பெற்றுத் தர நடவடிக்கை எடுப்பார் எனவும் மக்களிடம் தெரிவித்தார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பால் அரசுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி

அரசமைப்புக்கான இருபதாவது திருத்தம் தொடர்பில் உயர் நீதிமன்றம் செய்திருக்கும் பரிந்துரை - அல்லது தீர்ப்பு - ஆட்சித் தரப்புக்கு எதிர்பாராத நெருக்கடிகளைத் தரப்போகின்றது என்பது நிச்சயம்.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணி விஸ்வரூபம் எடுத்துத் தன்னை ஸ்திரப்படுத்தி, நிலைநிறுத்துவதற்கு அதிரடியான வாய்ப்பை இந்தத் தீர்ப்பு தந்திருக்கின்றது.

நல்லாட்சி அரசின் பங்காளிகளான ஐக்கிய தேசியக் கட்சி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சி பிரிவு ஆகியன மாத்திரமல்லாமல் அவற்றுடன் கூட்டுச் சேர்ந்து இயங்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட ஏனைய முஸ்லிம் கட்சிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவை அனைத்துக்குமே சிக்கல் தரும் ஓர் அதிரடித் தீர்ப்பாகவே இது வந்திருக்கின்றது.

அரசமைப்புக்கான இருபதாவது திருத்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதாயின் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மக்களின் அனுமதி பெற வேண்டும் என்ற உயர்நீதிமன்றத்தின் பரிந்துரையை அரசு ஏற்றுச் செயற்பட முன்வந்தாலும் கூட -

உடனடியாக கிழக்கு, சப்பிரகமுவ மற்றும் வடமேல் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடவடிக்கைகள் அடுத்த மூன்று வாரங்களில் ஆரம்பமாவதை அரசினால் தடுக்க முடியாது என்பதே யதார்த்தம்.

ஒரு மாகாண சபையின் பதவிக் காலம் முடிவடையும் போது, உடனடியாகத் தேர்தலைப் பிரகடனப்படுத்தி அதனை முன்னெடுக்கும் பொறுப்பு தேர்தல் ஆணையகத்தைச் சேர்ந்தது. 19ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலம் அந்த சுதந்திரம் - சுயாதீனம் - தேர்தல் ஆணையகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மூன்று மாகாண சபைகளுக்குமான பதவிக் காலம் அடுத்த மாதம் முதல் வாரத்தில் - அதாவது அடுத்த மூன்று வாரத்தில் முடிவடையப் போகின்றது. அது முடிவடையும் கையோடு அச்சபைகளுக்குத் தேர்தல் நடத்தும் பிரகடனத்தை வெளியிட்டு, தேர்தலை முன்னெடுப்பது தேர்தல் ஆணையகத்தின் சுயாதீனக் கடமை.

அதைக் கட்டுப்படுத்தும் விதத்தில்தான் இந்த இருபதாவது திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு அரசு உத்தேசித்தது. ஆனால் அந்த முயற்சி ஆரம்பத்திலேயே - அரசு எதிர்பாராத விதத்தில் - உயர் நீதிமன்றத் தீர்ப்பினால் குழம்பிப் போய்விட்டது. இனிமேல் சர்வஜனவாக்கு எடுப்பு நடத்தியோ அல்லது நடத்துவது போல காட்டியோ அல்லது இருபதாவது திருத்தத்தை வேறு வடிவத்தில் மாற்றுவதாக புதிய முயற்சி எடுத்தோ, அதன் மூலம் மேற்படி மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறுவதை அரசினால் தடுக்க முடியாது என்பதே நிலைமை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வலுவான ஒரு தரப்பும், தென்னிலங்கையின் ஏனைய எதிர்க்கட்சிகளும் கூட்டு எதிரணி என்ற பெயரில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் வலிமையாக உருவெடுத்து வரும் நிலையில், ஒரு தேர்தலைச் சந்திப்பது தலையிடியானதாகவும், தன்னுடைய அரசியல் எதிர்காலத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாகவும் அமையலாம் என்று அரசு அஞ்சுகின்றது. அதனால், இக்காலகட்டத்தில் ஒரு தேர்தலை நடத்தாமல் தவிர்க்கவே இந்த இருபதாவது அரசமைப்புத் திருத்த ஆயுதத்தை அது கையில் எடுத்தது.

இப்போது ஒரு தேர்தல் நடந்து, அதில் தன்னுடைய வாக்குப் பலத்தை மஹிந்த ராஜபக்ஷ நிரூபிப்பாராயின், சு.க. தலைமைப் பதவியையும், தான் கோட்டை விட வேண்டி நேரும் என்பது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அச்சம்.

அது போலவே, நடக்கக் கூடிய தேர்தல்களில் மஹிந்தரின் கூட்டு எதிரணி தனது வலிமையை நிலை நிறுத்தினால், தேசிய அரசு என்ற பெயரில் சு.கவுடன் அதன் தோளில், தான் செய்யும் அதிகார சவாரி ஆட்டம் கண்டு விடும் என்பது ஐ.தே. கட்சிக்கும் அதன் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் உள்ள பயம்.

இவை காரணமாகவே தேர்தலைத் தவிர்க்கும் எத்தனமாக இருபதாவது திருத்தம் நுழைக்கப்பட்டது. அந்த முயற்சிக்கு ஆப்பாக உயர் நீதிமன்றத் தீர்ப்பு அமைந்துவிட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்றவை கூட கிழக்கு மாகாண சபைத் தேர்தலை உடன் எதிர்கொள்ளும் நெருக்கடியை இந்தத் தீர்ப்பு தந்து நிற்கின்றது.

இனி இந்த மூன்று மாகாணசபைகளுக்கான தேர்தல்களும் அவற்றை தொடர்ந்து நாடு முழுவதுக்குமான உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களும் அரசியலில் முன்னுக்குத் தள்ளப்பட, இனப் பிரச்சினைத் தீர்வை உள்ளடக்கிய புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சி பின் தள்ளப்படும் என்பது நிச்சயம்.

# இலங்கை இராணுவத்தினர் ஒழுக்கமானவர்கள்!

## புகழ்கிறார் ஜனாதிபதி மைத்திரி!



கொழும்பு, செப். 16

இலங்கை இராணுவத்தினர் ஒழுக்கமானவர்கள் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புகழாரம் சூட்டியுள்ளார்.

இலங்கையின் முப்படையினர் தியகாவா போர்ப்பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பயிற்சியில் ஈடுபட்டிருந்த படையினரை நோக்கிக் காணொளியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த காலத்தில் நடைபெற்ற யுத்தத்தை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டு வருவதில் இலங்கையின் முப்படையினர் மற்றும் பொலிஸார், சிவில் பாதுகாப்புப் படையினர் அர்ப்பணிப்புடன் செயலாற்றினர்.

அத்துடன், உலகின் எந்தவோர் இராணுவத்துக்கும் இணையாகப் பேசப்படுமளவுக்கு நமது இராணுவத்தினரின் பயிற்சிகள் மற்றும் திறமைகள் காணப்படுகின்றன.

அதன் காரணமாகவே பல நாடுகளின் படைப் பிரிவுகள் நமது இராணுவத்தினரின் போர்ப் பயிற்சி ஒத்திகையில் கலந்து கொண்டுள்ளன. அது தொடர்பாக அவர்களுக்கும், அவர்களை அனுப்பிவைத்த அந் நாடுகளின் அரசுகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கை இராணுவத்தினர் ஒழுக்கமானவர்கள். அர்ப்பணிப்புள்ள கடமை உணர்ச்சி கொண்டவர்கள். அதன் காரணமாகவே இலங்கை இன்று உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் பாதுகாப்பாக விளங்குகின்றது என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்ந்தும் வாழ்த்தியுள்ளார்.

# சு.க., ஐ.தே.க. உறுப்பினர்களுக்கு ஜே.வி.பியின் தலைவர் அழைப்பு!



எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுத் தேர்தலில் தங்களுடன் இணைந்து போட்டியிடுவதற்குக் கூட்டணியொன்றை அமைத்துக்கொள்வதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும், ஐக்கிய தேசியக் கட்சியினதும் உறுப்பினர்களுக்கு மக்கள் விடுதலை முன்னணி அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தவை வருமாறு:-

ஆரம்பத்தில் எங்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி பிரதான எதிர்க்கட்சியாக்குமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுத்தோம். எனினும், அரசை மாற்றவேண்டும் என்பதே எங்களது அப்போதைய இலட்சியமாக இருந்தது.

கடந்த 2014 இல் அந்த இலட்சியம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் ஐக்கிய தேசியக் கட்சியினதும் கூட்டணியில் நிறைவேறியது.

எதிர்வரும் 2020 இல் இந்தக் கூட்டரசையும் வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்பதே எங்களது தற்போதைய குறிக்கோள். அதற்கான வல்லமையை மக்கள் 2020 தேர்தலில் எங்களுக்கு அளிப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

எனவே, இந்தச் சாதனையைச் செய்வதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் ஐக்கிய தேசியக் கட்சியினதும் உறுப்பினர்களை எங்களுடன் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுகிறோம் என்றும் அநுரகுமார திஸாநாயக்க கூறியுள்ளார்.

# வடக்கில் நிலக்கண்ணி வெடிகளை அகற்ற ஜப்பான் அரசு நிதி உதவி வழங்குகிறது!



கொழும்பு, செப். 16

வடக்கில் புதைக்கப்பட்டிருக்கும் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு ஜப்பான் அரசு நிதி உதவி வழங்கவுள்ளது.

இதன்படி, 19 கோடி ரூபாவை இலங்கைக்கு வழங்குவதற்கு ஜப்பான் முன்வந்துள்ளது.

நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் நிறுவனங்கள் மூலம் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட உள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின்போது பல இடங்களில் நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருந்தன. யுத்தம் முடிவடைந்த நிலையிலும் இன்றும் வடக்கின் சில பகுதிகளில் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படாமல் இருக்கின்றமையும், மக்கள் அச்சத்தின் மத்தியில் இருக்கின்றமையையும் காணக் கூடியதாக உள்ளது.

பொதுமக்களுக்குச் சொந்தமான இடங்களிலும் இவ்வாறு நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருக்கின்றமையால் அந்தப் பகுதியில் மக்கள் குடியேற முடியாமல் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், வடக்கிலுள்ள நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு ஜப்பான் முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## நாளை

17.09.2017
ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம் : ஆயிலியம் பி.இ.1.11 வரை
திதி : துவாதசி பி.ப. 3.04 வரை
சுபநேரம் : 09.03 – 10.33
இராகுகாலம் : 04.33 – 06.03

# லலித் வீரதுங்க 'சில்' துணி விவகாரத்தில் எந்தக் குற்றங்களையும் செய்யவில்லை!

## அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன கூறுகிறார்

கொழும்பு, செப். 16

சில் துணி விவகாரத்தில் சிறைத்தண்டனை அனுபவிக்கின்ற முன்னாள் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க எதுவித குற்றங்களையும் செய்யவில்லை என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும், அமைச்சருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இதனால், லலித் வீரதுங்க விற்காக குரல்கொடுத்துவரும் மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட தகைமை கொண்ட பிக்குகளை அநாவசியமான முறையில் விமர்சிப்பதை நிறுத்திக் கொள்ளுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களிடம் அமைச்சர் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

சில் துணி விவகாரத்தில் சிறையிலிருக்கும் இருவரை விடுவிப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் ஆலோசனையின் பேரில் நிதியமொன்றை மகாநாயகர்கள் உட்பட மூன்று பிரதான பௌத்த பீடங்கள் இணைந்து ஆரம்பித்துள்ளன.

இதற்கெதிராக அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான ராஜித சேனாரத்ன நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட போது, தேரர்களின் இப்படியான நடவடிக்கைகளை கடுமையாக கண்டித்திருந்தார்.

இந்தநிலையில், கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் அமைச்சருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதற்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



இன்று அனைத்து அரசியல் கட்சிகளும் மகாநாயக்க தேரர்களை விமர்சிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன. எனினும், இந்தச் செயற்பாடுகள் மிகவும் மோசமான வகையில் அமைந்துள்ளன.

மகாநாயக்க தேரர்களை விமர்சிப்பது அவர்களை அவமதிக்கும் செயற்பாடாகும். மகாநாயக்க தேரர்களை அவமதிப்பதன் மூலமாக இந்த நாட்டின் பாரம்பரியம், கொள்கைகள் மற்றும் பௌத்தத்தை இழிவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளன.

எனவே, சகல கட்சிகளும் உடனடியாக இந்தச் செயற்பாட்டை நிறுத்த வேண்டும் என்பது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்பாடாகும்.

தற்போது லிலித் வீரதுங்க மீதான விமர்சனங்கள் பல மடைந்து வருகின்றது. ஆனால், என்னை பொறுத்தவரையில் லலித் வீரதுங்க களவு செய்யவில்லை. அவர் அரச சொத்துக்களைக் கொள்ளையடிக்கவில்லை.

மக்கள் மூலமாக வழங்கிய நன்கொடையை பகிர்ந்தளிக்க அவருக்கு வழங்கப்பட்ட கட்டளையை அவர் செய்துள்ளார். ஆனால், அவர் வழங்கிய காலம் தான் தவறான காலமாக மாறிவிட்டது.

தேர்தல் காலத்தில் அவற்றை கொடுக்க முயற்சித்தமையே பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே, காலமே சதி செய்துள்ளது என்பதே எனது கருத்தாகும்.

எனினும், தற்போது நீதிமன்றத் தீர்ப்பு ஒன்று வழங்கப்பட்டுள்ளது. அதனை விமர்சிக்க முடியாது. எனினும், மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(மற்றொரு செய்தி 19 ஆம் பக்கத்தில்) (க)

# மந்துவிலில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளின் 18 ஆவது நினைவு நாள்!





முல்லைத்தீவு, செப். 16

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மந்துவில் பகுதியில் இராணுவத்தின் வான் படையினர் நடத்திய தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்கான அஞ்சலி நிகழ்வு நேற்றைய தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

மந்துவில் சந்தை பகுதியில் கடந்த 1999 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி இலங்கை வான்படையினர் மேற்கொண்ட மிலேச்சத்தனமான குண்டுத் தாக்குதலில் 24 பொது மக்கள் உயிரிழந்திருந்தனர்.

இந்தப் பகுதியில் நேற்றைய தினம் உறவினர்கள் மற்றும் பொது மக்கள் பலர் ஒன்றிணைந்து 18 ஆம் ஆண்டு நினைவு தினத்தை உணர்வுபூர்வமாக அனுஷ்டித்தனர். (க)

# சைவநெறிப் போட்டி இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம், செப். 16

யாழ். கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் உள்ள மாணவர்களுக்கான சைவநெறிப் போட்டிகள் இன்று சனிக்கிழமை வண்ணார்பண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் நாளை ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

பேச்சு, புராண படனம், பண்ணிசை, கதா பிரசங்கம், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல், கோலம் போடுதல் போன்ற போட்டிகள் தரம் 6 முதல் தரம் 13 வரையான மாணவர்களுக்கு நான்கு தனித்தனிப் பிரிவுகளாக நடைபெறும்.

கோட்ட மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டும் மாணவர்களுக்கான வலய மட்டப் போட்டிகள் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறும் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

# மீண்டும் தெற்கில் வெள்ளப் பெருக்கு!

இலங்கையின் தென்பகுதிகளில் மீண்டும் பெய்துவரும் அடை மழை காரணமாக பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, தலைநகர் கொழும்பை அண்மித்த கம்பஹா மாவட்டமே அடை மழையாலும் அதனால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்காலும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் பெய்து வரும் அடை மழை காரணமாக அத்தனகல்ல ஓயா பெருக்கெடுத்துள்ளதால் அதனை அண்மித்த பகுதி களில் வாழும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவிக்கின்றது.

கம்பஹா - ஜாஹெல பிரதான வீதியின் கிரிந்திவிட்ட அகரவிட்ட மற்றும் மாகேவிட்ட ஆகிய பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இந்த நிலையில் அடுத்து வரும் சில தினங்களுக்கு கம்பஹா மாவட்டம் உட்பட நாட்டின் தென்பகுதிகளில் தொடர்ந்து கடும் மழை பெய்யும் என்றும் வளிமண்டல வியல் திணைக்களம் அறிவித்துள்ளது.



இரத்தினபுரி மாவட்டத்தின் காவத்த கப்புஹேவத்த மற்றும்கலபட ஆகிய பகுதிகளில் சிறிய அளவில் மண் சரிவுகளும் பதிவாகியுள்ளன.

இந்த மண்சரிவு காரணமாக இந்தப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படவில்லை என்ற போதிலும் பாதுகாப்பு அச்சம் காரணமாக பல குடும்பங்கள் வெளியேறி பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளன.

இதேவேளை, மாத்தறை காலி களுத்துறை இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களிலும் மண்சரிவு அபாயங்கள் உள்ளன என எச்சரித்துள்ள அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அபாயம் நிலவும் பகுதிகளில் வாழும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளது. (க)

# மக்களுக்காக குரல் கொடுப்பவர்களே அதிகமாக விமர்சிக்கப்படுகின்றனர்!

## வியாழேந்திரன் எம்.பி. அதிருப்தி



மக்களுக்குப் பிரச்சினைகள் ஏற்படுகின்ற போது அவர்களுக்காக குரல் கொடுப்பவர்களே அதிகமாக விமர்சிக்கப்படுகின்றனர்.

-இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.வியாழேந்திரன் குறிப்பிட்டார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல வேலைகளை முன்னெடுத்து வருகின்றது. ஆனால், அவை மக்களுக்குத் தெரிவதில்லை. எமக்கு ஒதுக்கப்படுகின்ற பன்முகப் படுத்தப்பட்ட நிதியைக் கொண்டு அனைத்துக்கிராமங்களையும் அபிவிருத்தி செய்ய முடியாது.

வழங்கப்படுகின்ற பன்முகப்படுத்தப்பட்ட நிதியை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் பிரித்தால், ஒரு கிராமத்துக்கு ஆயிரம் ரூபா அளவிலேதான் கொடுக்க முடியும். இதனால்தான் பலரிடமிருந்தும் உதவிகளை பெறுவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம். நிறுவனங்களின் உதவியோடு சில எல்லைப்புறக் கிராமங்களைத் தத்தெடுத்து, அபிவிருத்திகளை மேற்கொண்டு வருகின்றோம்.

எங்களைச் சார்ந்தவர்களே எங்களை விமர்சிக்கின்றனர். எங்களது கண்களைக் குத்துகின்றனர். எம்மவர்களில் சிலர் விலை போகின்றவர்களாக இருக்கின்றனர்.

ஆனால், சகோதர இனத்தவர்களான முஸ்லிம் மக்கள் அவர்களுடைய மொழி, மதம், இனம் என்பவற்றில் அக்கறை கொண்டவர்களாக இருக்கின்றனர். - என்றார். (ச)

---

மருந்தை மாற்றிக் கொடுத்ததால்

## மூதூர் சிறுமி அநியாய சாவு!



திருகோணமலை மூதூரில் தாய் ஒருவர் மருந்தை மாற்றிக் கொடுத்தமையால் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மூதூரைச் சேர்ந்த சிவகாந்தன் பிறெஸ்மி (வயது- 4) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

சளியால் பாதிக்கப்பட்ட மேற்படி சிறுமிக்கு 'பிரிட்டோன்' மருந்துக்குப் பதிலாக வயோதிபர்களுக்கு உடல் நோவுக்குக் கொடுக்கும் 'மீதைல் சலிசிலேட்' என்னும் மருந்து கொடுக்கப்பட்டுள்ளது.

மருந்தைப் பருகிய அந்தச் சிறுமி சிறிது நேரத்தில் வயிறு எரிகிறது என அழுதுள்ளார். இதனை அடுத்து சிறிது நேரத்தில் அவர் மயங்கி விழுந்துள்ளார்.

இதனை அடுத்து, மகள் பருகிய மருந்தை தந்தையும் பருகவே, அவரும் மயங்கிக் கீழே விழுந்துள்ளார்.

அவர்கள் இருவரும் உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். எனினும், மேற்படி சிறுமி சிகிச்சை பலனின்றி, நேற்றுக் காலை உயிரிழந்துவிட்டார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் நடைபெற்ற வேளை மின்சாரத் துண்டிப்பு ஏற்பட்டது எனவும். இதன் காரணமாகவே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

---

## திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த 63 பேர் சமுதாயச் சீர்திருத்தத்துக்கு உட்பட்டனர்!

இந்த வருட ஆரம்பம் முதல் இதுவரையான காலப்பகுதியில், திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தின் கட்டளைப்படி, 63 பேர் சமுதாய சீர்திருத்தக் கட்டளைக்கு உட்பட்டனர்.

- இவ்வாறு திருகோணமலை பிராந்திய சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் எம்.எச்.முபாரக் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இரண்டு வருடங்களுக்கு மேற்படாத சிறு குற்றங்களுக்கு வழங்கப்படுகின்ற சிறைத் தண்டனை அல்லது தண்டப் பணம் அல்லது ஒத்திவைக்கப் பட்ட சிறைத்தண்டனைகளுக் குப் பதிலாக வழங்கப்படுகின்ற தண்டனையே, சமுதாய சீர்திருத்த கட்டளை ஆகும்.

மன்றத்தின் பிரதம நீதிவான் எம்.எச்.எம்.ஹம்ஸா, சமுதாய சீர்திருத்தப் பணியில் கூடிய கவனம் செலுத்தி வருகின்றார். சமூகத்தில் தவறு செய்தவர்கள் திருந்தி வாழ்வதற்கு சந்தர்ப்பம் வழங்கும் நோக்கிலேயே இவ்வாறான கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

இதன்மூலம் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களையும், குற்றச்செயல்களில் ஈடுபடத் தூண்டுபவர்களையும் திருத்தும் நோக்கில் தனிப்பட்ட உளவள ஆலோசனை வழங்கப்படும்.

மேலும், குழு உளவள ஆலோசனை, மருத்துவ உளவள ஆலோசனை, ஆன்மீகப் பயிற்சிகள், தொழில் பயிற்சி வழிகாட்டல்கள், சமூகப் பணிகளில் ஈடுபடுத்தல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.-என்றார். (ச)

---

## சுகாதார உத்தியோகத்தர்கள் 38 பேருக்கு நியமனங்கள்!



கிழக்கு மாகாண சுகாதார அமைச்சால் பொது சுகாதார சேவைகள் உத்தியோகத்தர்கள் 38 பேருக்கு நியமனங்கள் வழங்கும் நிகழ்வு, கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைக்கான வெற்றிடங்களை கருத்திற்கொண்டு, கிழக்கு மாகாணத்தின் 4 பிராந்தியங்களுக்கும் கீழுள்ள வைத்தியசாலைகளுக்குமாக, 16 தாதி உத்தியோகத்தர்களும், 22 விடுதிப் பொறுப்பாளர்களுக்கும், இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன. (ச)

---

## திருமலை விபத்தில் நால்வர் காயம்

திருகோணமலையில் இரண்டு ஓட்டோக்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், நால்வர் படுகாயம் அடைந்தனர்.

மனையாவெளி பாலையூற்றுப்பகுதியைச் சேர்ந்த இரண்டு ஆண்கள் மற்றும் இரண்டு பெண்கள் ஆகியோரே படுகாயமடைந்தவர்கள் ஆவர்.

இவர்கள் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். (ச)

---

# 20 ஐ ஆதரித்தவர்கள் ஜனநாயக விரோதிகள்

### த. ஜ. சு. முன்னணிப் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, செப்.16

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தை ஆதரித்தவர்கள் ஜனநாயக விரோதிகள்.

-இவ்வாறு தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் வி.கமலதாஸ் தெரிவித்தார்.

20 ஆவது திருத்தச் சட்டமூலம் கிழக்கு மாகாணசபையில் அங்கீகரிக்கப்பட்டமை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

20 ஆவது திருத்தச் சட்டமூலத்தை கிழக்கு மாகாணசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏகமனதாக ஏற்று வாக்களித்துள்ளது. இதன்மூலம் மாகாணசபை கிழக்கு மாகாணத் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு அநீதி இழைத்துள்ளது.

அவர்கள் வாக்களித்த மக்களுக்குத் துரோகம் இழைத்திருக்கின்றார்கள். மக்களின் உரிமைகளைக் குறுக்கு வழியில் பறித்தது மட்டுமல்லாமல், மத்திய அரசுக்கு அடகுவைத்திருக்கின்றார்கள். மக்களை முட்டாள்கள் என்று எண்ணிச் செயற்பட்டுள்ளனர்.

# இலங்கையில் மீறல்களுக்குப் பொறுப்பான குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும்!

### அமெ. செனட் உபகுழு தெரிவிப்பு

கொழும்பு, செப். 16

இலங்கை உள்ளிட்ட நாடுகளில்,பெரும்கொடூரங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டிய தேவை உள்ளது என அமெரிக்க செனட் உப குழு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான நிதி உதவியை 92 வீதத்தால் குறைக்கும், டொனால்ட் ட்ரம்ப் அரசின் திட்டத்தை நிராகரித்து, அமெரிக்க செனட் சபையின், ஆசிய பசுபிக் விவகாரங்களுக்கான உப குழு கடந்தவாரம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

பல நாடுகளில், மரபணுச் சோதனைகள் மூலம், பெரும் கொடூரங்களில் தொடர்புடைய குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டிய தேவை உள்ளது.

எச்சங்களை அடையாளம் காணப்படுவதற்கு, மரபணுச் சோதனைகள் நடத்தப்பட வேண்டியுள்ளன.

இலங்கை, சிரியா, ஈராக், கம்போடியா, எல்சல்வடோர், குவாடமாலா ஆகிய நாடுகளில் தடயவியல் அடையாளம் காணும் நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன.

இந்த நாடுகளில், இடம்பெற்ற மனித குலத்துக்கு எதிரான, மனித உரிமைகளுக்கு எதிரான ஏனைய மீறல்களுக்குப் பொறுப்பானவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தும் நீதித்துறை விசாரணைகள் தேவைப்படுகின்றன.

எனவே, இலங்கைக்கான ஒட்டுமொத்த நிதி வெட்டையும் ஏற்க முடியாது, நிதியளிப்பதற்கு இலங்கைக்கு நிபந்தனைகளை விதிக்கலாம் என்றும் அமெரிக்க செனட் உப குழு தெரிவித்துள்ளது.

# மின்சார சேவை ஊழியர்கள் கடமைக்கு திரும்ப வேண்டும்!

### தவறினால் நடவடிக்கை என்கின்றது அமைச்சு



தற்காலிக மற்றும் உடன்படிக்கை அடிப்படையில் மின்சார சபையில் பணியாற்றும் சகல அத்தியாவசிய, அவசர மின்சார சேவை வழங்கும் ஊழியர்களும் கடமைக்குத் திரும்ப வேண்டும். அல்லாதவிடத்து அந்த ஊழியர்கள் தமது பணியிலிருந்து விலகிச் சென்றவர்களாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும் என மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி வள அமைச்சு அறிவித்துள்ளது.

அந்த அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், தாம் முன்வைத்துள்ள கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரையில் முன்னெடுத்துள்ள தொழிற்சங்கப் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என ஒன்றிணைந்த தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது.

மேலும் கடந்த புதன்கிழமை முதல் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளபோதும் வைத்தியசாலை உள்ளிட்ட முக்கிய இடங்களில் சேவை இடம்பெறுகிறது.

எனினும், உரிய தீர்வின்றேல் நண்பகலுக்குப் பின்னர் பரந்துபட்ட போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் ஒன்றிணைந்த தொழிற்சங்க முன்னணியின் ஏற்பாட்டாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

(க)

# எதிர்வரும் செவ்வாயன்று ஐ.நாவில் உரையாற்றுகிறார் ஜனாதிபதி மைத்திரி!



கொழும்பு, செப்.16

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்வரும் 19 ஆம் திகதி ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தொடரில் உரையாற்றவுள்ளார். ஐ.நா பொதுச்சபையின் 72 ஆவது கூட்டத் தொடர் தற்போது நடந்து வருகிறது.

இதில், எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதிவரை உலகத் தலைவர்கள் உரையாற்றும் அமர்வு இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உரை எதிர்வரும் 19ஆம் திகதி மாலை இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழுவினர் இன்று கொழும்பில் இருந்து அமெரிக்கா புறப்படவுள்ளனர்.

ஐ.நா. பொதுச்சபையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றவுள்ள மூன்றாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்தப் பயணத்தின் போது, பாகிஸ்தான், நேபாளம் ஆகிய நாடுகளின் பிரதமர்கள் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி பேச்சு நடத்துவார் என்று ஜனாதிபதி ஊடகப் பணிப்பாளர் தர்மசிறி பண்டார எக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

# குச்சவெளியில் நீர்க்காகம் போர்ப் பயிற்சி; அமைச்சர் ருவான், தளபதிகள் நேரில் பார்வை





கொழும்பு, செப். 16

விமானப்படை, கடற்படையினரின் பங்களிப்புடன், இலங்கை இராணுவத்தினர் நடத்தும் நீர்க்காகம் போர்ப் பயிற்சி நேற்று முன்தினம் திருகோணமலை குச்சவெளி கடற்கரையில் இடம்பெற்றது.

இதில் பங்கேற்க இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, இலங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த போர்ப்பயிற்சியை ஜனாதிபதி மைத்திரி நேரில் பார்வையிடுவார் என்று பாதுகாப்பு வட்டாரங்களில் நம்பிக்கை வெளியிடப்பட்ட போதிலும், மைத்திரிபால சிறிசேன இந்த நிகழ்வில் பங்கேற்கவில்லை. காணொலித் தொடர்பு வழியாகவே அவர் உரையாற்றியிருந்தார்.

இந்தக் கூட்டுப் பயிற்சியை, இலங்கையின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், ருவான் விஜேவர்த்தன, பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன, இராணுவ, கடற்படை, விமானப்படைத் தளபதிகள் உள்ளிட்டோர் நேரில் பார்வையிட்டனர்.

இந்தப் போர்ப் பயிற்சியில் இலங்கை கடற்படையின் போர்க்கப்பல்கள், தாக்குதல் படகுகள், தரையிறங்கு கலங்கள், கரையோர ரோந்துப் படகுகள் என்பன பங்கேற்றன.

விமானப்படையின் குண்டு வீச்சு விமானங்களும்,ஹெலிக்கொப்டர்களும், இலங்கை இராணுவத்தின் கனரக வாகனங்களும் பயன்படுத்தப்பட்டன.

கடல் வழியாகவும் வான் வழியாகவும் தரையிறக் கப்பட்ட படையினரை, எதிரிப் படைகளின் முகாமை தாக்கியழிக்கும் சண்டைகள் நிகழ்த்திக் காண்பிக்கப்பட்டன.

இதில் 13 நாடுகளைச் சேர்ந்த 69 படை அதிகாரிகளும் பங்கேற்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மீள்குடியமர்வு; கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.16

காங்கேசன்துறை ஜே/233, ஜே/234, ஜே/235 கிராமசேவகர் பிரிவுகளில் இதுவரைக்கும் விடுவிக்கப்படாத பகுதிகளில் மீள்குடியேறுவது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்றை கோண்டாவில் உப்புமடச் சந்தி, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள வேதபாராயண சனசமூக நிலைய மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

குறிப்பிட்ட கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களை இதில் கலந்து கொள்ளுமாறு காங்கேசன்துறை உதயசூரியன் சனசமூக நிலையத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ)

## தினசரி ராசி பலன் 16.09.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆவணித்திங்கள் 31 ஆம் நாள் ஏகாதசித்திதி மாலை 4.31 மணி வரை. பின்னர் துவாதசி. நட்சத்திரம்- பூசம் பி.இ 1.05 மணி வரை. பின்னர் ஆயிலியம். மரணயோகம் மாலை 4.31 வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம் பகல்10.34 மணி முதல் 12.05 மணி வரை. சுபநேரம் மாலை 6.03 மணி முதல் 7.32 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி. ஆவணி மாத தேய்பிறை தசமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: புனர்பூசம்**

‘ஜோதிடமணி’ பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம் :** யோசனையான நாள். பொருளாதாரம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் உண்டாகும். தொழிலில் பிரயாசை உண்டாகும். சிலருக்கு செய்யும் தொழிலை இழக்க நேரிடும்.

**ரிஷபம்:**சமபலன்கள் காணப்படும். பொருளாதாரம் சுமாராக இருக்கும். செலவீனங்கள் அதிகரிக்கும். வியாபாரம் சுமாரான பலனைத் தரும். தொழிலில் அலைச்சல் உண்டாகும்.

**மிதுனம் :** யோகமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்ப ஒற்றுமை நீடிக்கும். சிலர் வெளிநாட்டில் தொழில் வாய்ப்புகள் கிடைத்து மகிழ்ச்சி அடைவார்கள்.

**கடகம் :** மகிழ்ச்சியான நாள். தனலாபம் பெருகும். குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும். பிரிந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேர்வார்கள். உத்தியோக உயர்வு கிடைக்கும்.

**சிம்மம் :** அலைச்சல் மிகுந்த நாள். தொழில் விடயமாக அலைச்சல்கள் அதிகரிக்கும். சிலர் கொடுத்த பணத்தை மீளப் பெறுவதற்கு அலைந்து திரிவார்கள். சிலருக்கு மருத்துவச் செலவுகள் உண்டாகும்.

**கன்னி :** நன்மையான நாள். நிதிநிலைமை வளமாக இருக்கும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். வெளிநாட்டு வியாபாரத் தொடர்புகளால் அதிக வருமானம் கிடைக்கும்.

**துலாம் :**சம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். வியாபாரத்தில் லாபமும் நஷ்டமும் உண்டாகும். சகோதர வழியில் நன்மை கிடைக்கும்.

**விருச்சிகம் :** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. பணப்புழக்கம் திருப்தியைத் தரும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைவார்கள்.

**தனுசு :** சம பலன்கள் காணப்படுகின்றன. வரவும் செலவும் சரிசமமாய் இருக்கும். வர்த்தகத்தில் மத்திம முன்னேற்றம் காணப்படும். தொழிலாளர் சிரமப்பட்டு தொழில் வாய்ப்புகளைப் பெறுவார்கள்.

**மகரம்:** முயற்சியான நாள். வருமானம் தேவைக்குப் போதுமானதாக இருக்கும். எடுக்கும் புதிய முயற்சிகள் வெற்றியைத் தரும். பிரிந்த உறவுகள் ஒன்று சேரும் வாய்ப்புகள் உண்டாகும்.

**கும்பம் :** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். செய் தொழில் விருத்தி அடையும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும்.

**மீனம் :** கவலையான நாள். வருமானம் குறைவாக இருக்கும். குடும்ப உறவில் அமைதி குறையும். உடலில் ரோகங்கள் உண்டாகி மருத்துவச் செலவு உண்டாகும்.

சந்திராட்டமநாள்: மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் கால் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

# பாதுகாப்பான ரயில் கடவைகளை அமைத்துத் தருமாறு கோரிக்கை



முல்லைத்தீவு,செப்.16

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாங்குளம் ரயில் நிலையத்துக்கும் முறுகண்டி ரயில் நிலையத்துக்கும் இடைப்பட்ட மக்கள் குடியிருப்புக்களில் ரயில் கடவை அமைக்கப்படாத இடங்களுக்கு விரைவில் ரயில்கடவைகளை அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் பல்வேறு தரப்பினரிடம் முறையிட்டும் தமக்கான தீர்வு இதுவரை கிடைக்கவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர். இறுதியாக மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாகவும் இரண்டு தடவைகள் ரயில் திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவே, உரிய அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு தமக்கான பாதுகாப்பான கடவையை அமைத்துத் தருமாறு கோருகின்றனர்.

பாதுகாப்பான கடவை இல்லாததன் காரணமாக பாடசாலை மாணவர்கள் முதல் அனைவரும் பாதிக்கப்படுகின்றனர் என்றும் உயிர் பயத்துடனேயே நடமாடுகின்றனர் என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர். (இ)


# யாழ். சாயி நிலையத்தில் நாளை இரத்ததானம் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.16

யாழ்ப்பாணம், சேர்.பொன். இராமநாதன் வீதியில் - யாழ். பல்கலைக்கழகத்துக்கு முன் - அமைந்துள்ள சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் 12.30 மணி வரை இரத்ததானம் வழங்கும்நிகழ்வுஇடம்பெறும்.

ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் இந்த மகோன்னத கொடையை வழங்கலாம் என்றும் நண்பர்களுக்கும் தெரியப்படுத்தி அழைத்து வாருங்கள் என்றும் சாயி நிறுவனத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

விலைமதிப்பற்ற உயிரைக் காக்கவல்ல எமது இரத்தத்தை தானம் செய்யும் இந்தச் சேவையில் கலந்து கொள்ளுங்கள். இரத்ததானத்தின் மூலம் இவ்வாழ்வை அர்த்தமுள்ளதாக



மாற்றுவோம் என வடபிராந்திய சர்வதேச சத்திய சாயி சேவா நிறுவனம் பணிவன்புடன் அறிவித்துள்ளது. (இ)

# நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிறு காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்**-

கரணவாய், இலகாமம், நாவலர்மடம், நெல்லியடி, கொடிகாமம் வீதி, சாமியன் அரசடி, விக்னேஸ்வரா, சம்மந்தர்கடை, கிழவிதோட்டம், காளிகோவிலடி, யார்க்கரு, கலிகை, அரசடி, வலிக்கந்தோட்டம், துன்னாலை, தாமரைக்குளத்தடி, இந்திரம்மன் கோவிலடி, வதிரி, இரும்புமதவடி, சக்களாவத்தை, தேவரையாழி, மனோகரா, திக்கம், திக்கம் சித்திவிநாயகர், முடக்காடு, மாலுச் சந்தி, அல்வாய், பாரதிதாசன், முத்துமாரி அம்மன் கோவிலடி, நாவலடி அல்வாய், அல்வாய் ஸ்ரீலங்கா பாடசாலை, வியாபாரி மூலை, இன்பருட்டி பிள்ளையார் கோவிலடி, இன்பர்சிட்டி, இலகடி, காந்தியூர், மந்திகை, கப்புது-

குளப்பிட்டி, ஆனைக்கோட்டை சந்தி, யாழ் வீதிமானிப்பாய், ஆறுகால்மடம், கூளாவடி, ஆனைக்கோட்டை VC, நவாலி, மூத்தவிநாயகர் கோவிலடி, சென் பீற்றர்ஸ் தேவாலயம், அரசடி, அட்டகிரி, வேலக்கை, குளப்பிட்டி ஆனைக்கோட்டைவீதி, சாவற்காட்டு சந்தி, வராகி அம்மன் கோவிலடி, காக்கைதீவு, தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தி, சிவன் அம்மன் வீதி, கந்தர்மடம், அன்னசத்திரச் சந்தி, இலுப்பையடி சந்தி, பருத்தித்துறை வீதியில் நாகவிகாரையில் இருந்து பாரதியார் சிலை வரை,-

விக்ரோறியா வீதி, மின்சார நிலைய வீதியில் ஒரு பகுதி, ரயில் நிலையப் பிரதேசம், மார்டின் வீதி, யாழ் 2 ஆம், 3ஆம், 4 ஆம் குறுக்குத் தெருக்கள், ஸ்ரான்லி வீதியில் ரயில் கடவையிலிருந்து இராசாவின் தோட்ட வீதி வரை, அம்பலவாணர் வீதி, ஆஸ்பத்திரி வீதி வேம்படி சந்தியிலிருந்து மார்டின் வீதி வரை, ஸ்ரான்லி வீதியில் ஆரியகுளத்திலிருந்து முட்டாசுக்கடை சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மணிக்கூட்டு வீதியில் ஒரு பகுதி, அரசடி, சங்கத்தானை-

சாவகச்சேரி, கச்சாய் வீதி, சாவகச்சேரி நகரம், நுணாவில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத்தொகுதி, நொதோண் சென்றல் கொஸ்பிற்றல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆண்கள் விடுதி,டம்றோ பலாலி வீதி, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், பீப்பிள் லீசிங் அன் பினான்ஸ் கம்பனி ஸ்ரான்லி வீதி, AVNOR பிறைவேற் லிமிற்ரெட், மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி, யாழ்.ரயில் நிலையம், Green Grass விடுதி, சிறிநதியா நகை மாளிகை, Raja Talikies, LOLC விடுதி, ரொப்பாஸ் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் அம்பலப் பெருமாள், கோட்டைகட்டி ஆகிய பிரதேசங்களிலும்-

இதேவேளை, ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கு மேலதிகமாக-

**யாழ் பிரதேசத்தில்**-

நாளை ஞாயிறு காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரை ஆஸ்பத்திரி வீதி, வேம்படிச் சந்தியிலிருந்து சத்திர சந்தி வரை, கந்தப்பசேகரம் வீதி, மகாத்மா காந்தி வீதி, முனீஸ்வரன் வீதி, கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி சந்தியிலிருந்து வின்சர் சந்தி வரை, மின்சார நிலைய வீதி, பெரிய கடை வீதி, போதனா வைத்தியசாலை, கொமர்ஷல் வங்கி, யாழ். தேசிய சேமிப்பு வங்கி, யாழ். இலங்கை வங்கி, ரில்கோ விடுதி, சுகாதாரத் திணைக்களம், கார்கில்ஸ் பூட் சிற்றி, யாழ். வைத்தியசாலை(மூன்று மாடிக் கட்டடத் தொகுதி) அபி கட்டடம், யாழ் விடுதி, பல்கலைக்கழக தங்கு விடுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் எம்.துவாரகன் அறிவித்துள்ளார். (இ)

வழிமூலம்- lowy institute.org
ஆங்கிலத்தில் - Darshana Baruah
மொழியாக்கம் - நித்தியபாரதி

# வலுவடைந்து வருகிறது இந்திய பெருங்கடலில் அதிகாரப் போட்டி!



இந்திய மாக்கடல் மீதான தலையீட்டை சீனா தொடர்ந்தும் விரிவுபடுத்தி வரும் நிலையில், இப்பிராந்தியத்தின் தலைமைப் பொறுப்பைத் தன் வசம் தக்கவைத்திருப்பதற்கான நகர்வுகளில் இந்தியா ஈடுபடுகிறது. இந்த நோக்கத்திற்காக, இந்தியா கடல் சார் கூட்டுப் பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதுடன் தனது நட்பு நாடுகளுடன் இணைந்து தனது கடல் நடவடிக்கைகளுக்கான வலைப் பின்னலைப் பலப்படுத்தி வருகிறது.

IORA போன்ற தனது பிராந்திய நிறுவகங்களுக்கு இந்தியா புத்துயிர் அளித்துள்ளதுடன் இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் பாதுகாப்பு மற்றும் மூலோபாய சவால்களைக் கலந்துரையாடுவதற்கான தளங்களையும் உருவாக்கி வருகிறது. இந்த நோக்கத்தின் ஒரு பகுதியாகவே கொழும்பில் இந்தியப் பெருங்கடல் கருத்தரங்கு இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில் இந்திய வெளிவிவகார அமைச்சர், சிறிலங்கா ஜனாதிபதி, சிறிலங்கா பிரதமர் மற்றும் சிசெல்ஸ், ஆஸ்திரேலியா, ஜப்பான், பங்களாதேஷ், சிங்கப்பூர் மற்றும் ஏனைய நாடுகளின் மூத்த பிரதிநிதிகள் போன்றோர் உரையாற்றும்போது இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் இந்தியா பலமான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதற்கான கருத்துக்களைத் தெரிவித்தனர்.

**இந்திய மாக்கடலை தலைமை தாங்குவது இந்தியாவே!**

இந்திய மாக்கடலை தற்போதும் இந்தியாவே தலைமை தாங்குகிறது என்பதையும் இன்றுவரை செயற்படு நிலையில் உள்ள ஒரு நாடாக இந்தியா விளங்குகின்றது என்கின்ற செய்தியும் இக்கருத்தரங்கின் குறியீட்டுச் செய்தியாகக் காணப்பட்டது.

கொழும்பில் இடம்பெற்ற இந்தியப் பெருங்கடல் கருத்தரங்கு மற்றும் இதையொத்த பல்வேறு கருத்தரங்குகள் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் பூகோள - அரசியல் மாற்றங்களின் மூலம் இடம்பெறுகின்றன.

இந்தியக் கடற்படையினரின் கடல் நடவடிக்கைகளுக்கான பிரதான இடமாகக் காணப்படும் இந்தியப் பெருங்கடல் அண்மைய ஆண்டுகளில் பூகோள-அரசியலில் பெருமளவில் அமைதி காத்து வந்துள்ளது. ஆனால் தற்போது இப்பெருங்கடல் முக்கிய மூலோபாய மையமாக மீளவும் எழுச்சியுற்று வருகிறது.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் சீனாவின் இராணுவ மற்றும் வர்த்தக விரிவாக்கம் (குறிப்பாக அதிபர் ட்ரம்பின் ஆட்சியின் கீழ் அமெரிக்காவில் இடம்பெறும் நிச்சயமற்ற விடயங்கள்) பூகோள அரசியல் மாற்றத்தின் மீள்எழுச்சிக்குக் காரணமாக உள்ளது.

**தொடர்கிறது முறுகல் நிலை**

வடக்கில் டொக்லம் எல்லைப் பிராந்தியத்தில் நிலவும் பிரச்சினை மற்றும் இந்தியப் பெருங்கடலில் சீனாவின் விரிவாக்கம் போன்றன அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகள் மத்தியிலும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க போட்டியை உருவாக்கியுள்ளது. BRICS உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சீனாவிற்குப் பயணம் செய்த போதிலும் சீனா மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவு தொடர்ந்தும் முறுகல் நிலையிலேயே காணப்படுகிறது.

இவ்விரு நாடுகளும் இராணுவ மோதல் ஏற்படுமளவிற்குச் செல்வதை விரும்பமாட்டா. எனினும், இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான உறவு நிலை தொடர்ந்தும் அவநம்பிக்கை நிறைந்ததாகவே காணப்படும்.

சீனா மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் பல்வேறு போட்டிகள் நிலவுகின்றன. புதுடில்லி மூலோபாய வர்த்தகச் செயற்பாடுகளில் பின்னடைவைக் கொண்டுள்ள அதே வேளையில், இந்தியப் பெருங்கடலில் நிலவும் இந்தியக் கடற்படையின் அதிகாரத்துடன் சீனாவால் இன்னமும் போட்டியிட முடியவில்லை.

**கடல் சார் நடவடிக்கைகளை பலப்படுத்தி வருகிறது சீனா**

எனினும், சீனாவின் கரையோரப் பிரசன்னமானது வெளிப்படையாக முன்னேறி வருகிறது. சீன நீர்மூழ்கிக் கப்பல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை, சீனாவின் முதலாவது வெளிநாட்டுத் தளம் டிஜிபோட்டியில் அமைக்கப்பட்டுள்ளமை, இந்தியப் பெருங்கடலில் சீனா தொடர்ந்தும் கடற்படைப் பயிற்சிகளில் ஈடுபடுகின்றமை போன்றன சீனா தனது கடல்சார் நடவடிக்கைகளைப் பலப்படுத்தி வருவதற்கான சில எடுத்துக்காட்டுக்களாகும்.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக இந்தியா இந்தியப் பெருங்கடல் தொடர்பான அரசியல், இராணுவ மற்றும் இராஜதந்திர நகர்வுகளை மீள வடிவமைத்துச் செயற்படுத்தி வருகிறது.

மே 2017 இல் இடம்பெற்ற ஒரு அணை மற்றும் ஒரு பாதை அரங்கில் கலந்துகொள்ளாது அதனைப் புறக்கணித்ததன் மூலம் சீனாவின் அந்தத் திட்டத்திற்கு தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. இவ்வாறான புதிய பாதைகளை அமைக்கும் போது பூகோள ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்துலக விதிமுறைகள், நல்லாட்சி, சட்ட ஆட்சி, வெளிப்படைத் தன்மை, சமத்துவம் போன்ற பல விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும் என இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

குறிப்பாக, இவ்வாறான திட்டம் ஒன்றை மேற்கொள்ளும்போது தக்க வைத்துக் கொள்ள முடியாத கடன் சுமைகளைத் தவிர்ப்பதற்கான நிதி சார் பொறுப்புக்கூறல் தொடர்பான அடிப்படைக் கோட்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். அத்துடன் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு போன்றவையும் மதிக்கப்பட வேண்டும்.

**சீனாவின் அழுத்தம்**

சீனாவின் தலைமையில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்யவில்லை என்பதையே இந்தியாவின் இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. எது எவ்வாறிருப்பினும், இந்தியா, சீனாவின் திட்டங்களை எதிர்ப்பதால் இது தொடர்பில் இந்தியா மாற்று வழிமுறைகளைக் கூறவேண்டும் என்கின்ற சீனாவின் அழுத்தத்திற்கும் ஆளாகுகின்றது.

இந்தியப் பெருங்கடலின் கரையோரங்களில் அமைந்துள்ள நாடுகள் மத்தியில் பிராந்தியவாத உணர்வைப் புதுப்பிப்பதில் இந்திய அரசாங்கம் ஆர்வமாக உள்ளது. இந்தியப் பெருங்கடலில் ஒற்றுமை மற்றும் அடையாளம் ஆகியவற்றை உருவாக்க வேண்டிய தேவையுள்ளதாக கடந்த ஆண்டு இந்தியப் பெருங்கடல் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இந்தியாவின் வெளிவிவகாரச் செயலர் எஸ். ஜெய்சங்கர் வலியுறுத்தியிருந்தார்.

இந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு புதிய பாதை இணைப்புத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தையும் இவர் குறிப்பிட்டிருந்தார்.


**ஆசிய - ஆபிரிக்க வளர்ச்சி நடைகூடம்**

ஜெய்சங்கர் உரையாற்றியதைத் தொடர்ந்து இந்தியா பல்வேறு புதிய இணைப்புத் திட்டங்களை அறிவித்துள்ளது. நவம்பர் 2016 இல், ஆசியாவை கரையோர இடைவழியின் ஊடாக ஆபிரிக்கா வரை இணைப்புச் செய்வது தொடர்பாக இந்தியாவும் ஜப்பானும் திட்டம் ஒன்றை வரைந்தன. இதற்கமைவாக இவ்வாண்டின் ஆரம்பத்தில் ஆசிய-ஆபிரிக்க வளர்ச்சி நடைகூடம் ஒன்று உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

ஈரானியத் துறைமுகமான சபஹாரை இந்தியாவும் யப்பானும் இணைந்து அபிவிருத்தி செய்வதாகவும் அறிவிக்கப்பட்டது. அத்துடன் பிராந்திய கட்டுமான அபிவிருத்தி தொடர்பாக அயல்நாடுகளான பங்களாதேஷ், சிறிலங்கா போன்றவற்றுடனும் இந்தியா கலந்துரையாடி வருகிறது.

இந்நிலையில், இந்தியப் பெருங்கடல் மீது சீனா மற்றும் இந்தியாவுக்கு இடையிலான போட்டி மேலும் வலுவடைந்து வருவதால் இந்தியா வினைத்திறன் மிக்க கோட்பாடுகளை உருவாக்குவதை விரைவுபடுத்திக் கொள்ளவுள்ளது.

**இந்தியா - சீனா நாடுகள் இடையே தொடர்ந்தும் முறுகல் நிலையே!!**



இந்தியப் பெருங்கடல் பிராந்தியம் முழுவதிலும் புதுடில்லியின் அண்மைய முயற்சிகள்வரவேற்கப்பட்டுள்ள அதேவேளையில், சீனாவின் வேகத்துடன் ஒப்பிடும் போது இந்தியாவின் வேகம் போதியதற்றதாக இருக்கலாம். ★




தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

அண்மையில் ஒரு பத்திரிகையாளர் கூட்டத்தில் வெளியுறவுத்துறை செயலர் றெக்ஸ் ரில்லர்சன் இது குறித்து விவரிக்கையில், இனிமுதல் இஸ்லாமாபாத் உடனான வொஷிங்டனின் உறவுகள் ஆப்கான் போரின் நடத்தை விதிகள் மீதான அமெரிக்க கோரிக்கைகளை அது கவனத்தில் கொண்டுள்ளதா



என்பதை பொறுத்தே தீர்மானிக்கப்படும் என்றார். பயங்கரவாதிகளுக்கு ‘‘பாதுகாப்பானபுகலிடம்’’ வழங்குபவர்களுக்கு வரவிருப்பதைக் குறித்து எச்சரிக்கப்பட்டுள்ளது என்று அறிவித்த அவர். எச்சரிக்கப்பட்டது (மற்றும்) முன்கூட்டியே எச்சரிக்கப்பட்டது என்றார்.

ஒத்துழைக்க மறுத்தால் இஸ்லாமாபாத் நிதியியல் ரீதியில் விலை கொடுக்க வேண்டியிருக்கும் என்பதோடு, உறவுகள் இன்னும் குறையும் அல்லது மோசமடைவதில் போய் முடியுமென ரில்லர்சன் அறிவுறுத்தினார். கீழ்படியாத பாகிஸ்தானுக்கு எதிராக வொஷிங்டன் என்ன குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென வினவிய போது, அவர்,



நாம் அவர்களுக்கு வழங்கும் உதவி மற்றும் இராணுவ ஒத்துழைப்பின் அளவு அத்தோடு நேட்டோ கூட்டணியில் இடம்பெறாத பங்காளியாக அவர்களுக்கு அந்தஸ்து வழங்குவது ஆகியவை நம்மிடம் உள்ள சில நிறைவேற்று வழிவகைகளாகும். அவை குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது என்றார்.

ரில்லர்சன் குறிப்பிடவில்லை என்றாலும், பாகிஸ்தானை ‘‘பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் அரசாக’’ முத்திரை குத்தி அச்சுறுத்த பரிசீலிக்கப்பட்டதை மூத்த ட்ரம்ப் நிர்வாக அதிகாரிகள் அறிந்திருந்தனர். அதுபோன்று முத்திரை குத்துவது தானாகவே சகல அமெரிக்க நிதி உதவிகளையும் இழக்க செய்யும் மற்றும் அனைத்து அமெரிக்க ஆயுத விற்பனைகளையும் நிறுத்தும், மற்றும் அரசாங்க, இராணுவ அதிகாரிகள் மீது தடைவிதிப்பதற்கும் இட்டுச் செல்லக்கூடும்.

தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான வெள்ளை மாளிகையின் மூத்த இயக்குநரும் மற்றும் ஜனாதிபதியின் துணை உதவியாளராக கடந்த மாதம் பெயரிடப்பட்டவருமான லிசா கர்டிஸ், சென்ற பெப்ரவரியில் ஹெரிடேஜ் பவுண்டேசன் அமைப்பு வெளியிட்ட ஓர் அறிக்கையில் குறிப்பிடுகையில், ‘‘பயங்கரவாத அரசு’’ என்று முத்திரை குத்துவதை ட்ரம்ப் நிர்வாகத்தின் ‘‘முதலாம் ஆண்டுக்குப்’’ பின்னர் பயன்படுத்துவதற்காக கையிருப்பில் வைத்திருக்குமாறு கேட்டுக் கொண்டார்.

ஆயிரக்கணக்கான படைத்துறை சாரா பாகிஸ்தானிய மக்களைக் கொன்றுள்ள மற்றும் பாகிஸ்தானின் கூட்டாட்சி முறையில் நிர்வகிக்கப்படும் பழங்குடி பகுதியின் வறிய



மக்களைப் பீதியூட்டிய டிரோன் தாக்குதல்களை அமெரிக்கா மீண்டும் தொடங்கும் என்பதையும் ரில்லர்சன் குறிப்பிட்டார். அண்மையில் பத்திரிகையாளர் சந்திப்பில், அப்பட்டமான சர்வதேச சட்டமீறலான டிரோன் தாக்குதல்கள் குறித்த ஒரு கேள்விக்கு அந்த எக்ஸான் நிறுவன முன்னாள் தலைமை செயலதிகாரி நேரடியாக பதிலளிக்க மறுத்தார். ஆனால், அந்த கேள்வியை விட்டுவிட்டு, அவர் அறிவிக்கையில், பயங்கரவாதிகள் எங்கே வாழ்ந்தாலும் அவர்களை நாங்கள் தாக்க இருக்கிறோம். - என்றார்.

ஜனநாயகக் கட்சி மற்றும் குடியரசுக் கட்சித் தலைவர்களுடன் சேர்ந்து, அமெரிக்க இராணுவ-பாதுகாப்பு ஸ்தாபகம், ஆப்கான் ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சி



களில் சம்பந்தப்பட்ட தலிபான் மற்றும் அதன் கூட்டாளிகளைக் குறிப்பாக ஹக்கானி வலையமைப்பை பாகிஸ்தான் ஒடுக்கத் தவறியதன் மீது நீண்ட காலமாக அதை குறைகூறி வருகிறது.

வொஷிங்டனும் அதன் நேட்டோ கூட்டாளிகளும், இரவுநேர தேடல்வேட்டைகள், டிரோன் தாக்குதல்கள் மற்றும் ஏனைய பயங்கர நடவடிக்கைகளைக் கொண்டு காபூலின் ஓர் ஊழல்பீடித்த மற்றும் அவர்களுக்கு பிரியமான ஒரு கைப்பாவை அரசாங்கத்திற்கு முட்டுக்கொடுத்து, ஒரு மூர்க்கமான நவ-காலனித்துவ ஆக்கிரமிப்புப் போரை நடத்தி வருகின்றன.

தலிபானின் பிற்போக்குத்தனமான இஸ்லாமியவாத சித்தாந்தம் ஒருபுறம் இருக்க, இதன்விளைவாக, அது பரந்த மக்களிடையே ஆதரவைப் பெற முடிந்துள்ளது. அமெரிக்கா சுமார் ஒரு ட்ரில்லியன் டொலர் செலவிட்டு, 2,400 இற்கும் அதிகமான துருப்புக்களை இழந்து, கடந்த 16 ஆண்டுகளாக உலகின் மிகவும் வறிய நாடுகளில் ஒன்றான அதன் மீது படுகொலைகளைக் குவித்த பின்னரும் கூட, ஒக்ரோபர் 2001 இல் அமெரிக்க படைகள் அந்நாட்டின் மீது படையெடுத்ததற்கு பின்னர் இருந்ததை விட தலிபான் கிளர்ச்சிகள் பலமாகவே உள்ளன.

**ஆப்கானிஸ்தானில் குறிப்பாக பொருளாதார உதவி வழங்குவதில் இந்தியா இன்னும் அதிகமாக ஈடுபட வேண்டுமென ட்ரம்ப் அழைப்புவிடுக்கிறார்.**

ரில்லர்சன், பாகிஸ்தானுக்கான வொஷிங்டனின் இரட்டை அச்சுறுத்தலின் மற்றொரு கூறுபாட்டை சுருக்கமாக குறிப்பிட்டுச் சென்றார்: அதுவாவது, ஆப்கானிஸ்தானில் குறிப்பாக பொருளாதார உதவி வழங்குவதில் இந்தியா இன்னும் அதிகமாக ஈடுபட வேண்டுமென ட்ரம்ப் அழைப்புவிடுக்கிறார்.

படைத்துறைசாரா பகுதிகளை இலக்கில் வைப்பதில் மற்றும் வேறுவழியில்லை என்றால் அமெரிக்க தளபதிகளுக்குப் பொருத்தமாக தெரிந்தால் அமெரிக்க போர் எந்திரத்தை பயன்படுத்துவதில் அவர்களுக்கு உள்ள சகல கட்டுப்பாடுகளையும் நீக்குவதை அதன் மைய கூறுபாடுகளில் உள்ளடக்கி உள்ள ட்ரம்பின் புதிய ஆப்கான் போர் மூலோபாயத்தை வரவேற்பதில் இந்தியா சிறிதும் தாமதம் காட்டவில்லை.

ஆப்கானிஸ்தான் முகங்கொடுக்கும் சவால்களை மற்றும் அது எதிர்கொண்டிருக்கும் பாதுகாப்பு புகலிட பிரச்சினைகளை மற்றும் பயங்கரவாதிகள் அனுபவிக்கும் எல்லை-கடந்த ஆதரவின் ஏனைய வடிவங்களையும் அந்நாடு கடந்து வருவதற்காக முயற்சிகளை விரிவாக்குவதில் ஜனாதிபதி ட்ரம்ப் தீர்மானமாக இருப்பதை நாங்கள் வரவேற்கிறோம் என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் அறிவித்தது.

ட்ரம்பின் ஆப்கன் உரையில் அவர் இந்தியாவை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஒரு ‘‘முக்கிய பாதுகாப்பு மற்றும் பொருளாதார பங்காளியாக’’ அங்கீகரித்திருந்ததை இந்திய பெரு நிறுவன ஊடகங்கள் புகழ்ந்தன.

(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



97




## அத்தியாயம் - VI

## முற்றிச் சென்றது முரண்பாடு!

இந்தியப் படையின் ஆயுதக் களைவு முயற்சி முற்று முழுதாகத் தோல்வி கண்டிருந்தது. அந்த முயற்சியே இரத்த ஆறு ஓடும் போராகவும் நீடித்துச் செல்லும் போராகவும் வடிவெடுத்தது. இந்திய அமைதிப்படைதானே ஒரு கொலைப் பொறியாக மாறியது. ஆயிரமாயிரம் அப்பாவித் தமிழ் மக்கள் உயிரிழந்தார்கள். இப்பொழுதோ வென்றால், சிறிலங்கா அரசுத் தலைவராலேயே அமைதிப் பேச்சு தொடக்கப்பட்டிருக்கின்றது. அது ஒரு புரட்சிகர புதிய நிலையைத் தோற்றுவித்திருக்கின்றது. அதை நடைமுறைச் சாத்தியமான வழியாக இனம் கண்டு அதற்கு முகம் கொடுக்க வேண்டும். சிறிலங்கா அரசுக்கும் புலிகளுக்கும் இடையே நடந்துகொண்டிருக்கும் பேச்சு எதுவித நிபந்தனைகளோ, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கடப்பாடு நெருக்குவாரங்களோ இல்லாமல் நடந்துகொண்டிருக்கின்றன; ஆயுதங்களை வைத்திருப்பதும் அவற்றைக் களைவதும் சிறிலங்காவுக்கும் புலிகளுக்கும் இடையே உள்ள ஒரு பிரச்சினையாகும்.

சம்பந்தப்பட்ட இரண்டு பிரிவினருமே பேசித் தீர்க்க வேண்டிய விடயம் இது. ஆகவே, ஆயுதங்களைக் கீழே வைக்கும் பிரச்சினையைத் தீர்க்கும் பொறுப்பு சிறிலங்கா அரசினுடை யது என்பதை சிறிலங்கா அரசு இந்தியாவிடம் வலியுறுத்திக் கூறவேண்டும் என்று புலிகள் விதந்துரைத்தார்கள். அது தவிர, தமிழ்த் தேசிய இரா ணுவம் என்ற பெயரில் பலம்மிக்க இராணுவம் ஒன்றை இந்தியா கட்டி எழுப்புவதையொட்டி புதுடில்லியிடம் கடும் மறுப்பை அரசு தெரிவிக்க வேண்டும் என்றும் புலிகள் வலியுறுத்தினர்.

ஆயுதக் களைவு என்ற பெயரில் வடக்கு – கிழக்கிலே பெரிய இராணுவ மயத் திட்டம் ஒன்றில் இந்திய அமைதிப்படை ஈடுபட்டிருக்கின்றது என புலிகள் குற்றஞ்சாட்டினார்கள். ராஜீவ் காந்தியின் கடிதத்தில் கூறப்பட்ட இரண்டாவது நிபந்தனை தொடர்பாக, வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்துக் குடிமக்கள் மட்டிலும் போர் நிறுத்தம் கடைப்பிடிக்கத் தாம் தயார் என்று கூறிய புலிகள், அதற்கு முன், இந்திய அமைதிப் படைகளும் அதன் அடிவருடி ஆயுதக் குழுக்களும் புலிகளுக்கு எதிரான வன்செயலைக் கைவிடுவார்கள் என்று இந்தியா உத்தரவாதம் அளிக்கவேண்டும் என்று கேட்டார்கள்.

ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் கலந்துகொள்ள விடுதலைப் புலிகள் தயாராக இருந்தார்கள்; ஆனால் அதற்கு முன், தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் இந்தியப் படைகள் முழுமையாக வெளியேறவேண்டும் என்றும் அவர்கள் கூறினார்கள். கூட்டத்திலே புலிகளின் அணி தெரிவித்த கருத்துக்களை அரசுத் தலைவர் பிரேமதாசா, இந்தியப் பிரதமருக்கு எடுத்துரைப்பார் என்று அரச அணி உறுதியளித்தது.

பிரேமதாசா ராஜீவ் காந்திக்கு ஜூலை மாதம் 4 ஆம் திகதி எழுதிய கடிதத்தில், சில விடயங்களைத் திட்டவட்டமாகக் கூறினார். சிறிலங்காவுக்குள் வாழும் அனைத்துக் குடிமக்களுக்கும் பாதுகாப்பையும் காப்புறுதியையும் வழங்கவேண்டிய பொறுப்பு சிறிலங்கா அரசுக்கு மட்டுமே உண்டு என்று அவர் குறிப்பிட்டார். அத்துடன், இலங்கைக் குடிமக்கள் மீதான பாதுகாப்பு அதிகாரங்கள் எவற்றையும் இந்திய - இலங்கை ஒப்பந்தம் இந்தியாவிடம் ஒப்படைக்கவில்லை என்றும் கூறினார். முந்திய இரண்டு ஆண்டுகளாகப் புலிகளிடம் இருந்து ஆயுதக் களைவு நடத்த இந்தியா தவறிவிட்டதைச் சுட்டிக் காட்டிய பிரேமதாசா, புலிகள் அந்தத் தருணத்தில் சிறிலங்காவுடன் அரசியல் பேச்சு நடத்திக்கொண்டிருக்கின்றனர் எனவும் இந்திய ஆயுதப் படைகள் வெளியேறிய பின், புலிகள் தங்கள் ஆயுதங்களைக் கைவிடுவார்கள் என்றும் தெளிவாகத் தெரிவித்தார்.

ஒப்பந்தத்துக்கு அமைவாக, இந்திய அரசோ, அதன் ஆயுதப் படைகளோ இலங்கைக்குள் செயற்பட கட்டளை உரிமை கொண்டிருப்பதாக வாதிப்பது "தனித்த இறையாண்மையுடைய நட்பு நாடு ஒன்றின் உள்நாட்டு விவகாரங்களில் பாரதூரமாகத் தலையிடுவதாக அமையும்" என்றும் அவர் எச்சரித்தார்.

சிறிலங்காவில் இருந்து இந்திய ஆயுதப் படைகளைத் திருப்பி அனுப்பும் முயற்சியில், ராஜீவ் நிர்வாகத்துடன் முட்டிமோதும் நிலைப்பாட்டை எடுக்க பிரேமதாசா முற்பட்டுவிட்டார் என்பதை கடிதத்தின் பகைமைத் தொனியும் உள்ளடக்கமும் உணர்த்தின. அதே கடும் நிலைப்பாட்டையே காந்தியும் எடுத்தார். தமது பதிலை ஜூலை மாதம் 11 ஆம் திகதி சிறிலங்கா அரசுத் தலைவருக்கு அனுப்பினார். இரண்டு நாடுகளுக்கும் இடையே கைச்சாத்தான ஒப்பந்தம் ஒன்று இருப்பதை அவர் நினைவூட்டினார். ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடக்கு – கிழக்கு மக்களின் பாதுகாப்புக்கும் காப்புறுதிக்கும் உத்தரவாதம் வழங்கும் கடப்பாடு இந்தியாவுக்கு இருப்பதை அவர் சுட்டிக் காட்டினார்.

வடக்கு – கிழக்கு மாகாணசபைக்கு வழங்குவதாக வாக்குறுதி அளித்த அதிகாரப் பகிர்வுகளை சிறிலங்கா நடைமுறைப் படுத்தவில்லை என்று கண்டனம் தெரிவித்தார். இந்தியப் படைகளின் வெளியேற்றம் தொடர்பாகப் பேசுவதானால், இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தலுக்கான அட்டவணையையும் கூடித் தயாரிக்கலாம் என்றும் காந்தி வலியுறுத்தினார். அரசுத் தலைவர்கள் இடையே நம்பிக்கையின் அடிப்படையில் நடைபெறும் அதிகாரபூர்வக் கடிதங்களை ஒட்டி பேணப்படவேண்டிய ஒழுக்காற்றைக் கைவிட்டு, அவற்றையெல்லாம் பகிரங்கப்படுத்தியமைக்காக, ராஜீவ் காந்தி, தமது கடிதத்தின் கடைசிப் பந்தியில், பிரேமதாசா மீதும் நேரடிக் கண்டனம் தெரிவித்தார்.

ராஜீவின் மூர்க்கத்தனமும் பகைமைப் போக்கும் பிரேமதாசாவுக்குக் கடும் சீற்றத்தைக் கொடுத்தன. இந்தியப் பிரதமருக்குக் கடிதங்கள் எழுதி, இந்தியப் படைகளைத் திருப்பி அழைக்கக் கேட்டதில், பயனேதும் இல்லை என்று அவர் உணர்ந்தார். வகையறியா நிலையில் அவர் இன்னொரு தந்திரோபாயத்தைக் கடைப்பிடித்தார்.

இந்திய அமைதிப் படை அடங்கலாக நாட்டிலுள்ள அனைத்துப் படைகளினதும் ஏகதளபதி என்ற தம் நிலையில் நின்று, இந்திய அமைதிப் படையின் கட்டளைத் தளபதி லெப்.ஜெனரல் கல்கற்றுக்கு இறுதியாணை அனுப்பினார். இந்தியப் படைகள் அனைத்தும் ஜூலை மாத முடிவுக்குள் வெளியேற்றப்படவேண்டும் என்றும், அல்லது பாசறைகளுக்குள் முடக்கப்படவேண்டும் என்றும் தெரிவித்தார். இந்த இறுதியாணை ஒரு சட்டப் பத்திரமாக, ஜூலை மாதம் 23 ஆம் திகதியன்று திருகோணமலையில் தளபதி கல்கற்றிடம் கையளிக்கப்பட்டது. இதற்குப் பதிலாக, தளபதி கல்கற், எச்சரிக்கை ஒன்றைப் பிரேமதாசாவுக்கு அனுப்பினார்.

சிறிலங்காப் படைகள் தம் பாசறைகளை விட்டு வெளியே வந்தால் அவர்களுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட இந்தியப் படையினர் நிர்ப்பந்திக்கப்படுவார்கள் என்று அதில் தெரிவித்தார். பிரேமதாசாவின் உராய்வு நிலை, இராஜதந்திர அணுகுமுறை இங்கு பயனளிக்கத் தவறிவிட்டது.

## ஆயுத உதவிக்கான வேண்டுகோள்

பிரேமதாசாவின் இறுதி எச்சரிக்கையை உடனடுத்து, வடபகுதி முல்லைத்தீவுக் காடுகளில் இருந்த புலிகளின் கெரில்லா படையணிகளுக்கு எதிராக இந்தியப் படைகள் தங்கள் தாக்குதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தின. இன்னொரு புறத்தில், இந்திய அமைதிப்படையோடு அருகருகாக நின்று, தமிழ்த் தேசிய இராணுவம், விடுதலைப் புலிகளுக்கு எதிரான தனது நடவடிக்கைகளைத் தொடங்கப் போவதாக வரதராஜப்பெருமாள் அறிவித்தார்.

இந்திய – இலங்கை ஒப்பந்தக் கடப்பாடுகளைப் பிரேமதாசா நிர்வாகம் நடைமுறைப்படுத்தத் தவறினால், தாம் தனி அரசான ஈழப் பிரகடனத்தைச் செய்யப் போகின்றோம் என அவர் தெரிவித்தார். இப்படியான இக்கட்டான பின்னணியிலேயே, நாம் தங்கியிருந்த விடுதியில் ஓர் அவசர சந்திப்புக்காக ஹமீதுவை, பாலா அழைத்தார். இந்தியப் படைகளிடம் இருந்தும், தமிழ்த் தேசிய இராணுவத்திடமிருந்தும் கிளர்ந்திருக்கும் இராணுவ அச்சுறுத்தலுக்கு விடுதலைப் புலிகள் முகம் கொடுப்பதற்கு வசதியாக ஆயுத உதவிகளை அரசிடமிருந்து பெறமுடியுமா என்பதை ஆராய்வதற்காகவே ஹமீதுவை பாலா அழைத்தார். அன்று மாலை 9 மணிக்கு ஹமீது விடுதிக்கு வந்து, கூடத்துக் கதிரையில் சாவகாசமாக அமர்ந்து, நீண்ட கியூபா சுருட்டு புகைத்தவண்ணம் பாலா கூறுகின்றமையைப் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தார். மிகக் கவனமாக எடுத்துரைக்கப்படவேண்டிய விடயம்! அதேசமயம், ஆபத்தானதும் பிரச்சினைக்கு உரியதுமான விடயம்! உண்மையான கள நிலையையும் அதன் கனதியையும், அதுவும் முல்லைத்தீவுப் போராட்டக் கள நிலையையும் தமிழிலும், ஆங்கிலத்திலும் மிக நிதானமாக பாலா விளக்கினார்.

புலிகளிடம் இருந்த ஆயுதத் தளவாடங்கள் கடகடவென்று குறைந்துபோய்க் கொண்டிருந்தன. மறுபுறம் பெருந்தொகை இந்தியப் போர்ப் படைகளையும் தமக்கு ஆதரவாகத் தமிழ்ப் போராளி அணிகளையும் பெருமளவிலே முல்லைத்தீவுக் காடுகளுக்குள் இந்தியப் படைகள் குவித்துக்கொண்டிருந்தன. பாலா இவற்றைக் ஹமீதுவுக்கு விளக்கினார். பிரேமதாசாவுடைய கடும் போக்கு இராஜதந்திரத்தால் சீற்றமடைந்த இந்திய இராணுவமும் தமிழ்க் கூலிப் படைகளும், தமிழ் புலிக் கெரில்லா போராளிகளையும் அவர்களுடைய தலைமையையும் அழித்தொழிக்கத் தீர்மானித்தன. கொழும்புப் பேச்சின் போது இந்திய அமைதிப் படையினரின் அடாவடித் தனங்களை அம்பலப்படுத் தியமையும் அவர்களைத் திரும்பப் பெற வேண்டும் என்று சிறிலங்கா அரசுத் தலைவர் ஆணையிட்டமையும் புதுடில்லியை தர்மசங்கடத்துக்கு உள்ளாக்கியதால், அவர்களுடைய கடும் கோபம் புலிகள் மீது திரும்பியிருந்தது. இந்திய அமைதிப் படையினதும், தமிழ்த் தேசிய இராணுவத்தினதும் கூட்டுத் தாக்குதலுக்கு அந்த வேளை முகங்கொடுத்து, தம்மைக் காப்பாற்றிக்கொள்ள முனைந்து நிற்கும் புலிகளுக்கு ஆயதங்களையும் போர்த் தளவாடங்களையும் வழங்க பிரேமதாசாவால் இயலுமாக இருக்குமா என்று பாலா கேட்டார்.

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir


# மீண்டும் மக்கள் சேவைக்கு தயாராகிறது

# தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை!




1949ம் ஆண்டு தொடக்கம், மிகச்சிறப்பான முறையில் இயங்கிவந்த தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை, போர்ச்சூழல்களால் 1990ஆம் ஆண்டு முதல் இயங்க முடியாத நிலையில் இருந்தது. இந்தக் கூட்டுறவு வைத்தியசாலை, தற்பொழுதுள்ள கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தின் பணிப்பாளர் சபை மேற்கொண்ட முயற்சிகளால் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்றது.

கூட்டுறவுத் வைத்தியசாலைச் சங்கத்தின் தலைவர் இ.சேதுநாதன் தலைமையில் நடைபெறும் திறப்பு விழாவில் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வைத்தியசாலையை திறந்து வைக்க உள்ளார்.

1940களில் கூட்டுறவுத் துறை யாழ்ப்பாண மக்களின் மேம்பாட்டுக்காக ஆற்றிவந்த பணிகள் முழு நாட்டையும் பிரமிக்க வைத்ததென்றால் மிகையாகாது. அந்தக் கால கட்டத்தில் சமுதாயத்தின் அடிமட்ட மக்களும் சிறந்த சுகாதார சேவையை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற உயரிய நோக்கில் சமூகப் பெரியார்கள் பலர் ஒன்று கூடி எடுத்த அயராத முயற்றிகளால் தெல்லிப்பழையில் கூட்டுறவு வைத்தியசாலை தோற்றம் பெற்றது.

அந்தக் காலத்தில் மலாயா நாட்டில் தொழில் புரிந்து வந்த பலர் இந்த வைத்தியசாலைக்கு உதவி புரிந்தனர். இந்த வைத்தியசாலையின் தாபகத் தலைவராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை எஸ். ஜே.வி. செல்வநாயகம் பொறுப்பேற்று பல வருடங்கள் சேவையாற்றியமை வரலாற்றில் முக்கிய இடத்தை பெறுகின்றது. அவருக்கு பக்கபலமாக முன்னாள் மூதவை உறுப் பினர் எஸ்.நடராசாவும் மற்றும் பல கல்விமான்கள், தொழிற்றுறை நிபுணர்கள், சமூக சேவையாளர்கள் இருந்து செயற்பட்டனர்.

வைத்தியசாலை நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக பெரிய வளர்ச்சியை அடைந்தது.



இந்த வைத் தியசாலைக்கான சுமார் 4 ஏக்கர் காணியை இளவாலையைச் சேர்ந்த கொடைவள்ளல் அமரர் தம்பு கனகரத்தினம் நன்கொடையாக வழங்கினார்.

## பெரும் புகழ் பெற்றிருந்த மகப்பேற்று சிகிச்சை

கூட்டுறவு வைத்தியசாலை சத்திர சிகிச்சைக்கூடம், மகப்பேற்று சிகிச்சைக் கூடம் உட்படப் பல்வேறு சிகிச்சை வசதிகளையும் கொண்டிருந்தது. இலங்கையின் பிரசித்தி பெற்ற மகப்பேற்று வைத்திய நிபுணரான வைத்தியகலாநிதி கெங்கம்மா இங்கு தமது இறுதிக்காலம் வரை பணியாற்றியமையால் வைத்தியசாலை நாட்டில் பெரும் புகழ் பெற்றிருந்தது. அந்தக் காலத்தில் பிரித்தானியாவின் தலைசிறந்த மூன்று மருத்துவ பல் கலைக் கழகங்களில் FRCS பட்டங் களைப் பெற்ற வைத்தியகலாநிதி செல்வேந்திரா சந்திரசிகிச்சை நிபுணராகக் கடமையாற்றினார்.

இன்னும் பல சிறந்த வைத்திய நிபுணர்களின் சேவைகள் இந்த வைத்தியசாலை ஊடாக மக்களுக்கு வழங்கப்பட்டன.

1990ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தால் பல அழிவுகளை சந்தித்த வைத்தியசாலை முற்றாக செயலிழந்தது. மீண்டும் இதனை செயற்பட வைப்பதில் பல்வேறு காலகட்டங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. ஆயினும், நாட்டில் யுத்த சூழ்நிலைகள், அதனைத் தொடர்ந்து மக்கள் சந்தித்த பேரழிவுகளால் ஏற்பட்ட தாக்கம் வைத்தியசாலையை மீண்டும் செயற்பட வைப்பதில் தடையாக இருந்து வந்தது.

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை பணிப்பாளர் சபை மேற்கொண்ட அயராத முயற்சியால் சில பரோபகார அன்பர்களின் ஒத்துழைப்புடன் மீண்டும் இந்த வைத்தியசாலை சில அத்தியாவசிய சேவைகளுடன் தற்போது ஆரம்பிக் கப்படுகின்றது. உடனடிச்சேவைகளாக பொது வைத்தியசேவை, வைத்திய நிபு ணர்களின் ஆலோசனை சேவை, ஆய்வுகூட வசதிகள், மருந்தகம், சித்த மருத்துவம், அக்குப்பஞ்சர் முதலானவை ஆரம்பிக்கப்படுகின்றன. ஏனைய மருத்துவ சேவைகள் படிப்படியாக விஸ்தரிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

## குறைந்த கட்டணத்தில் தங்குமிட வசதிகள்

புற்றுநோயாளருக்கான வடமாகாணத்தின் ஒரேயோர் அதி சிறப்பு வைத்தியசாலையாகத் தெல்லிப் பழை ஆதார வைத்தியசாலை விளங்குகின்றது. இந்த வைத்திய சாலைக்கு வடமாகாணத்துக்கு அப்பால் இருந்தும் புற்றுநோயாளர்கள் வருகைதருகின்றனர். அந்த நோயாளர்களின் உறவினர்கள், தங்குவதற்கு உரிய வசதிகள் இன்றிப் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். ஆகவே, அவர்களுக்கு சேவை நோக்கில் குறைந்த கட்டணத்தில் தங்குமிட வசதிகளும் எம்மால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

இன்றைய திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினர் களாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி க.நந்தகுமாரன், வலி. வடக்கு பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ, யாழ் போதனா வைத்தியசாலை பிர திப்பணிப்பாளர் வைத்தியர் ச.ஸ்ரீபவானந்தராஜா, தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலை வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் யோ.திவாகர் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கூட்டுறவு உதவி ஆணையாளர் பொ.மோகன், தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், தந்தை செல்வாவின் மைந்தர் சட்டத்தரணி சா.செ. சந்திரகாசன், கூட்டுறவு வைத்தியசாலை வளாகக் காணிகளின் பரோபகாரியின் மகள் செல்வி கன கரத்தினம் மகேஸ்வரி ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# இலங்கையில் ஒரு மணித்தியாலத்துக்கு ஒருவர் விபத்தால் சாவு!

கொழும்பு, செப். 16

இலங்கையில் ஒவ்வொரு மணித்தியாலத்துக்கு ஒருவர் பல்வேறு விபத்துக்களால் உயிரிழந்து வருகின்றனர் என ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

வீதி விபத்து, தற்கொலை உட்பட அவசர விபத்துக்களால் 15 வயதுக்கும் 44 வயதுக்கும் இடைப்பட்ட இலங்கையர்கள் ஒருவருடத்துக்கு 10 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர் எனவும் சுகாதார மற்றும் உள்நாட்டு மருத்துவ விவகார அமைச்சின் தொற்றாத நோய்கள் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு விபத்துக்குள்ளாகும் இலங்கையர்கள் ஐவரில் ஒருவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றனர்.



இந்த மாதம் 18 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரையில் தேசிய விபத்து தவிர்ப்பு மாதம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.


இதன்போது -

வாகன உரிமையாளர்கள் மற்றும் வாகனம் செலுத்துபவர்கள் ஆகியோரை தெளிவுபடுத்தும் பல்வேறு நிகழ்ச்சிகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன எனவும் அந்தப் பிரிவு அறி வித் துள்ளது.


(க)

# பிரித்தானிய நாட்டு ஊடகவியலாளர் ஒருவரை அறுகம்குடாவில் இழுத்துச்சென்ற முதலை!

## அவரது உடல் மீட்கப்படவில்லை








கொழும்பு, செப். 16
இலங்கைக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்டிருந்த பிரித்தானியாவின் முன்னணி நாளிதழான ‘பைனான்சியல் ரைம்ஸின்’, இளம் ஊடகவியலாளரை முதலை இழுத்துச் சென்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

போல் மக் கிளீன் என்ற 25 வயதுடைய, ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக பட்டதாரியான இந்த ஊடகவியலாளர், தனது நண்பர்களுடன் இலங்கைக்கு சுற்றுலா வந்திருந்தார்.

இவர்கள், கிழக்கின் அறுகம் குடாவில் ஒரு விடுதியில் தங்கியிருந்தனர். நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.15 மணியளவில், கழிப்பறைக்குச் செல்கிறேன் என, நண்பர்களிடம் கூறி விட்டுச் சென்ற ஊடகவியலாளர் காணாமற்போயிருந்தார்.

அவர், அப்பகுதியில் உள்ள முதலைகள் அதிகம் நடமாடும் ஆனைமலை என்று கூறப்படும் நீரேரியில் கைகளைக் கழுவ முயன்ற போது முதலை இழுத்துச் சென்றுள்ளது என நம்பப்படுகிறது.

நீருக்குள் இழுத்துச் செல்லப்படுவதற்கு முன்னர் அவர் தனது கைகளை உயர்த்தி உதவி கோரினார் என நேரில் பார்த்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

அறுகம்குடா அருகே, ஆனைமலை நீரேரியில், நேற்று முன்தினம் பிற்பகல் 3.15 மணியளவில் கடற்கரையில் இருந்து ஒருவரை முதலை ஒன்று ஆற்றுக்குள் இழுத்துச் செல்வதைக் கண்டேன் என உள்ளூர் மீனவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் ஆற்றின் மறுபக்கத்தில் அப்போது இருந்துள்ளார். உடனடியாக பொலிஸாரின் உதவி கோரப்பட்டு, தேடுதல்கள் நடத்தப்பட்டன. எனினும், முதலை இழுத்துச் சென்ற ஊடகவியலாளரின் உடல் மீட்கப்படவில்லை.

கடற்படை, இராணுவத்தின் துணையுடன் தேடுதல்கள் நடத்தப்பட்டாலும், ஆழமான, சேறு நிறைந்த நீரேரி என்பதால் உடலை மீட்பது கடினம் என்று கூறப்படுகிறது. முதலைகளை ஆழமான சேற்றுக்குள் உடல்களை மறைத்து விடும் என்றும், எனவே உடலைக் கண்டுபிடிப்பது சிரமம் என்றும் கூறப்படுகிறது.

அறுகம் குடா உள்ளிட்ட இலங்கையின் பல நீரேரிகளில் ஆபத்தான உவர்நீர் முதலைகள் வசிக்கின்றன. இவை தொடர்பான எச்சரிக்கைப் பலகைகளையும் அதிகாரிகள் நட்டுள்ளனர். இளம் ஊடகவியலாளரை முதலை இழுத்துச் சென்ற சம்பவம் சுற்றுலாப் பயணிகள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

## கைதடி குருசாமி வித்தி. பரிசில் நாள் நாளை

கைதடி குருசாமி வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணகல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவமும், மதிப்புறு விருந்தினராக பரிசில் நிதிய உறுப்பினர் சி.செல்வநாயகமும் கலந்து கொள்வர்.

## யாழில் சர்வதேச திரைப்பட விழா!

யாழ்ப்பாணம், செப். 16
யாழ்ப்பாணம் சர்வதேச திரைப்பட விழா நேற்று ஆரம்பமானது. யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடமும் ஹற்றன் நஷனல் வங்கியும் அரங்க அனுசரணையாளர்களாக இணைந்து நடத்தும் இந்த திரைப்படவிழா எதிர்வரும் 20ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது.

சுமார் 25 நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட திரைப்படங்கள் திரையிடப் படவுள்ளதுடன் இவற்றில் சர்வதேச விருதுபெற்ற உள்நாட்டு வெளிநாட்டுத் திரைப் படங்களும் அடங்குகின்றன.

## வடக்கு, கிழக்கில் அபிவிருத்திப் பணி; அதிவேக நெடுஞ்சாலை விரைவில்!



கொழும்பு, செப். 16
அதிவேக நெடுஞ்சாலைகளை நிர்மாணிக்கின்றபோது காலத்திற்கு காலம் மாற்றமடையாத வகையில் தேசிய கொள்கையொன்றை வகுக்க வேண்டியது அவசியம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தினார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வீதி அபிவிருத்தியின் கீழ் வட மாகாண அதிவேக நெடுஞ்சாலைகளின் நிர்மாணப் பணிகளுக்கான திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான கடனுதவியை வழங்க இந்தியா விருப்பம் தெரிவித்துள்ளது என்றும் ஜனாதிபதி இதன் போது குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்திலிருந்து இலகுவாக கொழும்புக்கு வந்து சேரக்கூடியவகையில் அதிவேக நெடுஞ்சாலை அல்லது உயர்தரத்துடன்கூடிய நெடுஞ்சாலையை நிர்மாணிப்பது குறித்தும் திட்டமொன்றை விரைவாகத் தயாரிக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

வீதி அபிவிருத்தி மற்றும் மேம்பாலங்கள் திட்டத்திற்காக தேசிய மற்றும் வெளிநாட்டு ஏற்பாடுகள் கிடைக்கும் முறை தொடர்பாக வினவிய ஜனாதிபதி, அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணப்பணிகள் காரணமாக காணிகளை இழந்தவர்களுக்கு நட்டஈடு வழங்கும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

## கொழும்பைச் சென்றடைந்தது ‘மாலபே’ எதிர்ப்பு வாகனப் பேரணி!



கொழும்பு, செப். 16
மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியை இரத்துச் செய்யுமாறு வலியுறுத்தி நான்கு நாள்களுக்கு முன்னர் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஆரம்பமான வாகனப் பேரணி நேற்று கொழும்பைச் சென்றடைந்துள்ளது.

யாழ்ப்பாணம், திருகோணமலை உள்ளிட்ட பகுதிகளிலிருந்து 2 ஆயிரத்துக்கும் அதிகமான வாகனங்கள் நேற்று கொழும்பைச் சென்றடைந்துள்ளன. வாகனப் பேரணி கொழும்பைச் சென்றடைந்ததால் பெரிய வாகன நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதனால், ஏற்கனவே அத்தியாவசிய தேவை தவிர்ந்தவர்கள் கொழும்புக்கு வருவதைத் தவிர்க்குமாறு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்திருந்தது.

சைட்டத்துக்கு எதிராக நடத்தும் வாகனப் பேரணியைத் தொடர்ந்தும் அரசாங்கம் உரிய தீர்வொன்றை வழங்கா விட்டால் சுகாதாரத்துறை மற்றும் கல்வித்துறையைச் சேர்ந்த பல தொழிற்சங்கங்களை இணைத்து எதிர்வரும் 21 ஆம் திகதி பெரிய வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று முடிவடைந்த வாகனப் பேரணிக்கு ஆதரவாக மேல்மாகாணத்தின் கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களிலும் புத்தளம் மற்றும் குருணாகல் மாவட்டங்களிலும் அரசாங்க வைத்தியசாலைகளில் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டன என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டொக்டர் சரித்த அளுத்கே தெரிவித்துள்ளார்.

அரசாங்க மருத்துவ சங்கத்தின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

## மக்கள் வாழத் தகுதியற்ற இடமாக தனுஷ்கோடி



பழமையான வரலாற்றுச் சிறப்பு மிக்க தனுஷ் கோடி தற்போது வாழ்வதற்குத் தகுதியற்ற இடமாக அறிவிக்கப்பட்டுள்ளது. பழைய தனுஷ் கோடி, தாவுக்காடு, பாரடி உள்ளிட்ட கிராமங் களிலும் அங்குள்ள பள்ளிகளிலும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தக் கோரி ராமேஸ்வரம் உப்பூரைச் சேர்ந்த திருமுருகன் என்பவர் உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் பொதுநல வழக்கினைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் சசிதரன், சுவாமிநாதன் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப் போது அரசு தரப்பில் ஆஜராகிய அதிகாரிகள் பழமையான வரலாற்றுச் சிறப்பு மிக்க தனுஷ் கோடி தற்போது வாழ்வதற்கு தகுதியற்ற இட மாக அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், மீன வர்கள் தொழில் நிமித்தமாக மட்டுமே தற்கா லிகமாக தங்கியுள்ளனர் என்றும் தெரிவித்தனர்.

மேலும், அங்கு பழைய தபால் நிலையம், ரயில் நிலையம் உள்ளிட்டவை நினைவுச் சின் னங்களாக மட்டுமே உள்ளன என்றும் கடல்சீற்ற காலங்களில் இங்கு வசிப்பது ஆபத்தானது என்றும் இதனால் அந்தப் பகுதியில் அடிப்படை வசதிகளை நிறைவேற்றாமல் உள்ளோம் என வும் விளக்கமளித்துள்ளனர்.

இதனைக் கேட்ட நீதிபதிகள் நாளை தனுஷ் கோடிக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொள் ளவுள்ளன எனத் தெரிவித்துள்ளனர். அதன்பின் இந்த மனு மீதான அடுத்த உத்தரவு பிறப் பிக்கப்படும் என்று கூறி மனு மீதான விசா ரணையை 18 ஆம் திகதிக்கு ஒத்திவைத் துள்ளனர்.

# 'இரட்டை இலை' சின்னம் யாருக்கு?

### ஒக்.31 இற்குள் அறிவிக்க வேண்டும் எனத் தேர்தல் ஆணையத்துக்கு உயர் நீதிமன்றம் அதிரடி உத்தரவு

மதுரை,செப்.16

இரட்டை இலைச் சின்னம் யாருக்கு என்பதை ஒக்ரோபர் 31ஆம் திகதிக்குள் அறிவிக்க வேண்டும் என தேர்தல் ஆணை யத்துக்கு உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது.



திருச்செந்தூரைச் சேர்ந்த ராம்குமார் ஆதித்தன் மதுரை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் கூறியவை வருமாறு:-

அ.தி.மு.க.வில் பிளவு ஏற்பட் டதால் 45 ஆண்டுகளாக அக்கட்சி யின் அதிகாரபூர்வ சின்னமாக இருந்த இரட்டை இலைச் சின் னத்தை தேர்தல் ஆணையம் முடக் கியது. சின்னத்தை பெறுவதற்காக அ.தி.மு.க. அணிகள் சார்பில் பிர மாண பத்திரங்கள் உட்படப் பல் வேறு ஆவணங்கள் தேர்தல் ஆணையத்தில் தாக்கல் செய்யப் பட்டுள்ளன.



காங்கிரஸ்-சமாஜ்வாடி கட்சி யில் பிளவு ஏற்பட்ட போது அதிக பெரும்பான்மை உள்ள பிரிவுக்கு தேர்தல் ஆணையம் சின்னத்தை ஒதுக்கியது.

எனவே, ஓய்வு பெற்ற நீதிபதி முன்னிலையில் ஓ. பன்னீர் செல் வம், எடப்பாடி பழனிச்சாமி, டி.டி.வி. தினகரன் ஆகியோர் அணியில் உள்ள எம்.பிக்கள், எம்.எல்.ஏக்கள், நிர்வாகிகள், பொதுக்குழு, செயற் குழு உறுப்பினர்கள் பங்கேற்கும் கூட்டத்தைக் கூட்டி தேர்தலை நடத்த வேண்டும். அதில் வெற்றி பெறும் அணியினருக்கு இரட்டை இலைச்சின்னத்தை ஒதுக்க வேண் டும் என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும். என அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று முன் தினம் விசாரணைக்கு வந்தபோது இரட்டை இலைச்சின்னத்தை ஒதுக் குவது தொடர்பாக தேர்தல் ஆணை யம் விசாரணை நடத்தி வருகின் றது என்று தேர்தல் ஆணையம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

சமாஜ்வாடி கட்சியில் யாருக்கு சின்னம் ஒதுக்குவது என்பது குறித்து 16 நாள்களுக்குள் தேர்தல் ஆணையம் முடிவு செய்தது. ஆனால், இந்தப் பிரச்சினையில் மார்ச் மாதம் 2 அணிகள் சார்பிலும் மனு கொடுத்தும் தேர்தல் ஆணை யம் இதுவரை முடிவு எடுக்காமல் உள்ளது.

எனவே ஒக்ரோபர் 31ஆம் திக திக்குள் இரட்டை இலைச் சின்னம் யாருக்கு? என்பதை முடிவெடுத்து தேர்தல் ஆணையம் அறிவிக்க வேண் டும் என்று உத்தரவிட்டு நீதிபதிகள் வழக்கை முடித்து வைத்தனர்.

## எந்தச் சூழ்நிலையையும் எதிர்கொள்ள தயாராக உள்ளது இந்திய ராணுவம்

எந்தவிதமான பிரச்சினைகள் வந்தாலும் அதை எதிர்கொள்ள இந்திய இராணுவம் தயாராக உள்ளது என பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித் துள்ளார்.




மத்தியப் பிரதேச மாநிலத்தில் உள்ள மகரபுரா ராணுவ விமான தளத்தை மத்திய பாதுகாப்புத் துறை மந்திரி நிர்மலா சீதாராமன் நேற்று முன்தினம் பார்வையிட் டார். அப்போது ஏர் மார்ஷல் எஸ். பி.பி.சின்ஹா மற்றும் ஏர் கமாண் டர் எச்.ஏ.ரத்தோர் ஆகியோர் உடனிருந்தனர்.

அதன்பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் -நாட்டு பாதுகாப்புக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுத்து வருகின்றது. எல்லைப் பகுதியில் நடைபெற்று வரும் துப்பாக்கிச் சூடு மற்றும் ஊடுருவல்கள் பிரச்சினைகள் தொடர்பாக பாதுகாப்பு அமைச் சகமும் உட்துறை அமைச்சகமும் ஒருவருக்கொருவர் ஒருங்கி ணைந்து செயற்படுகின்றனர்'' என்றார்.

அதன்பின்னர், உத்தரப் பிரதேச மாநிலத்தின் வாரணாசி நகரில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், ''நாட்டின் எல்லைகள் முழுமை யான பாதுகாப்புடன் இருக்கின்றன, எந்தவிதமான பிரச்சினைகள் வந் தாலும் அதை எதிர்கொள்ள இந் திய ராணுவம் தாயாராக உள்ளது''.- என்றும் தெரிவித்துள்ளார்.

## புலி உறுமலைக் கேட்டு சாவடைந்த குரங்குகள்

உத்தரபிரதேசத்தில் புலியின் உறுமல் சத்தத்தைக்கேட்டு 12 குரங் குகள் உயிரிழந்துவிட்டன என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உத்தரப்பிரதேசத்தில் உள்ள காட்டுப்பகுதியில் 12 குரங்குகள் ஒரே நேரத்தில் இறந்துள்ளன. இக் குரங்குகளைப் பிரேத பரிசோ தனை செய்ததில், அனைத்து குரங் குகளுக்கும் மாரடைப்பு ஏற்பட்டு இறந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இது புலியின் உறுமல் சத்தத்தை கேட்டு வந்திருக்கலாம் என கால் நடை மருத்துவர்கள் தெரிவித் துள்ளனர். ஆனால், காட்டுக்குள் இருக்கும் குரங்குகள் புலியின் சத் தத்தை அதிகமாகக் கேட்டிருக்கக் கூடும்,



## டில்லியில் பிச்சை கேட்டு விவசாயிகள் போராட்டம்

டில்லியில் கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக விவசாயிகள் பிச்சை எடுத்து நூதனமுறை யில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

டில்லியில் கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக விவசாயிகள், அய்யாக்கண்ணு தலைமையில் போராட்டம் நடத்தி வருகிறார்கள். இதில் பங்கேற்றுள்ள விவசாயிகள் தினமும் நூதனமான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

விவசாயிகளின் இந்தப் போராட்டம் 61ஆவது நாளாக நேற்று முன்தினம் நடைபெற்றது. அப் போது விவசாயிகள் பிச்சை எடுத்து நூதனமுறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அவர்கள் 'மோடியே மோடியே எங்களை பிச்சை எடுக்க வைத்து விட்டாயே' போன்ற கோஷங்களை எழுப்பினார்கள்.

# ஈராக்கில் இரட்டைத் தற்கொலைத் தாக்குதல்: 74 பேர் உடல் சிதறிச் சாவு; பலர் படுகாயம்!





பக்தாத்,செப்.16

ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய இரட்டைத் தற்கொலைப் படைத் தாக்குதல்களில் சிக்கி, 74 பேர் உயிரிழந்துள்ளனர்; நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயம் அடைந்துள்ளனர்.

ஈராக் நாட்டின் திகார் மாகாணத்தில் நசிரியா பகுதியில் அமைந்துள்ள வீதியோர உணவகம் ஒன்றில் நேற்று வெள்ளிக்கிழமை தீவிரவாதி ஒருவன் திடீரென நுழைந்தான். அங்கிருந்தவர்களை நோக்கித் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டான். அதைத் தொடர்ந்து, அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் சோதனைச் சாவடிமீது அவன் கார் வெடிகுண்டுத் தாக்குதலை நடத்தினான்.

படுகாயம் அடைந்தவர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலருடைய நிலைமை கவலைக்கிடமாக உள்ளமையால் சாவு எண்ணிக்கை உயரும் என அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளது.


ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது ஆதிக்கத்தை நிலைநிறுத்தக் கடுமையாகப் போராடி வருகின்றனர். அவர்களது போராட்டத்தை அமெரிக்கப் படையினரின் உதவியால் ஈராக் தவிடு பொடியாக்கி வருகிறது. ஆனாலும் அவர்கள் தற்கொலைப்படைத் தாக்குதலை நடத்தி பெருத்த சேதத்தை விளைவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

அமெரிக்காவில் ஆவணமின்றி வசிப்போருக்கு

## குடியுரிமை வழங்க முடியாது; பொதுமன்னிப்பு வழங்கலாம்!

### ட்ரம்ப்– எதிர்க்கட்சியினர் சந்திப்பில் உடன்பாடு

அமெரிக்காவில் உரிய ஆவணமின்றி வசித்து வரும் 8 லட்சம் பேருக்கு குடியுரிமை வழங்க முடியாது, ஆனால், பொதுமன்னிப்பு வழங்கலாம்.



-இவ்வாறு அந்த நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின் போதே இந்த உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு சிறிய வயதிலேயே சென்று உரிய ஆவணங்கள் இன்றி சுமார் 8லட்சம் வெளிநாட்டவர்கள் குடியேறி உள்ளனர். இவர்களுக்கு முன்னாள் ஜனாதிபதி ஒபாமா காலத்தில் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. இதன் காரணமாக அவர்கள் தொடர்ந்து அமெ ரிக்காவில் தங்கி இருக்கத் தடை ஏதும் இல்லை என்ற நிலை ஏற்பட்டது.

ஆனால், தற்போதைய ஜனாதிபதி ட்ரம்ப், ஒபாமாவின் முடிவுக்கு மாறான நிலையை எடுத்தார். 8 லட்சம் பேருக்கு வழங்கப்பட்ட 'டி.ஏ.சி.ஏ.' என்று அழைக்கப்படுகிற பொதுமன்னிப்பை ரத்துச் செய்தார்.

இந்தநிலையில், இது தொடர்பாக எதிர்க்கட்சியான ஜனநாயகக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான நான்சி பெலோசி, சக்ஸ்சுமர் ஆகியோர் நேற்று முன்தினம், ஜனாதிபதி ட்ரம்பைச் சந்தித்துப் பேசினர். இதன்போதே இந்த பிரச்சினையில் பெரும் திருப்பம் ஏற்பட்டுள்ளது.

இதற்குப் பதிலாக ட்ரம்பின் அமெரிக்க எல்லைப் பாதுகாப்புத் திட்டத்தில், எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி அவருடன் இணைந்து செயற்படுவதற்கு முடிவு எட்டப்பட்டுள்ளது.

இதுபற்றி எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தவை வருமாறு–

''மெக்ஸிகோவுடனான எல்லையில் சுவர் கட்டும் திட்டத்தைத் தவிர்த்து, மற்ற அனைத்து எல்லைப் பாதுகாப்புத் திட்டங்களிலும் இரு கட்சிகளும் இணைந்து செயற்படுவதற்கு உடன்பட்டுள்ளோம்.''– என்றனர். (ச)

## அடங்காத வடகொரியா: மீண்டும் ஏவுகணைச் சோதனை!




ஜப்பான் தொலைக்காட்சி ஒன்றில் காட்டப்பட்ட வட கொரிய ஏவுகணை பறந்து சென்ற தடம்

புதிய பொருளாதாரத் தடையை பொருட்படுத்தாத வடகொரியா, வடக்கு பசிபிக் கடல் பகுதியில் மீண்டும் ஏவுகணைச் சோதனை நடத்தி உள்ளது.

வடகொரியாவின் இந்தப் புதிய ஏவுகணைச் சோதனையை தென்கொரியா மற்றும் அமெரிக்க இராணுவங்கள் உறுதிப்படுத்தி உள்ளன.

இந்த ஏவுகணை உள்ளூர் நேரப்படி நேற்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு ஏவப்பட்டது என தென் கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

ஜப்பானுக்கு அப்பால் அமைந்துள்ள வடக்கு பசிபிக் கடல் பகுதியில் பரிசோதனை செய்யப்பட்ட இந்த ஏவுகணை 3 ஆயிரத்து 700 கிலோ மீற்றர் வரை சென்று இலக்கைத் தாக்கக் கூடியது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதே வழியை வடகொரியா தொடர்ந்தும் பின்பற்றினால், அந்த நாட்டின் எதிர்காலம் ஒளிமயமாக இருக்காது,'' என்று அந்த நாட்டுப் பிரதமர் ஷின்சோ அபே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் எச்சரிக்கையை மீறி வட கொரியா அடுத்தடுத்து அணு ஆயுத மற்றும்



ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது. இதன் காரணமாக, அந்த நாட்டின் மீது ஏற்கனவே பல்வேறு பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், கடந்த 3 ஆம் திகதி 6 ஆவது முறையாக அணுகுண்டை விட அதிக சக்திவாய்ந்த ஹைட்ரஜன் குண்டை வடகொரியா வெற்றிகரமாக சோதனை செய்தது. இதனையடுத்து, கடந்த திங்கட்கிழமை அமெரிக்காவின் கோரிக்கையை ஏற்று வடகொரியா மீது 8 ஆவது முறையாகப் பொருளாதாரத் தடை விதித்து, ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்ஸிலில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த நிலையில், மீண்டும் வடகொரியா ஏவுகணைச் சோதனையை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## உலகின் மிக வயதான பண்டா கரடி சீனாவில் சாவு



சீனாவில் உள்ள ஒரு பூங்காவில் வாழ்ந்து வந்த உலகின் மிக வயதான பண்டா கரடி உயிரிழந்துள்ளது. சீனாவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள புஷோவு மாகாணத்தில் உள்ள ஓர் உயிரியல் பூங்காவிலேயே இந்த பண்டா கரடி வாழ்ந்து வந்தது.

ஃபாசி என பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டு வந்த அந்த பாண்டாகரடி, திடீரென நேற்று வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளது.

37 வயதான இந்த பெண் பண்டா கரடி, ஃபாசி என்ற பள்ளத்தாக்கில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதனாலேயே அதற்கு அந்தப் பெயர் வைக்கப்பட்டது என பூங்கா ஊழியர்கள் கூறினர்.




# பிரிமா கிண்ண

## மோதலுக்கு வடக்கு, கிழக்கு அணிகளும் தயார்

பாடசாலை மட்ட கிரிக்கெட் வீரர்களின் திறமைகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் தேசிய மட்டத்திற்கு சிறந்த வீரர்களை உருவாக்கும் எண்ணக்கருவுக்கு அமைய இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பூரண ஒத்துழைப்புடன் 11ஆவது தடவையாக நடைபெறவுள்ள 15 வயதிற்குட்பட்ட பிரிமா கிண்ண கிரிக்கெட் போட்டிகளின் மாகாண மட்டப் போட்டிகள் எதிர்வரும் 20ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் ஆரம்பமாகவுள்ளன.

இதன்படி, செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் இருந்து சுமார் 600இற்கும் அதிகமான பாடசாலை வீரர்களின் பங்குபற்றலுடன் 39 மாவட்ட மட்ட அணிகளின் பங்குபற்றலுடன் ஆரம்பமாகிய போட்டித் தொடரின், மாவட்ட மட்டப் போட்டிகள் அனைத்தும் தற்போது நிறைவுக்கு வந்துள்ளன.

இந்நிலையில், அப்போட்டிகளில் திறமைகளை வெளிப்படுத்திய வீரர்களை உள்ளடக்கிய 12 அணிகள் மோதும் மாகாண மட்டப் போட்டிகள் அடுத்த வாரம் முதல் கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெறவுள்ளன.

இதில் கடந்த முறையைப் போல வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தி அணிகள் களமிறங்கவுள்ளதுடன், வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து இம்முறை 5 அணிகள் களமிறங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், 2 பிரிவுகளாக நடைபெறவுள்ள மாகாண மட்டப் போட்டிகளின் இறுதிப் போட்டி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 6ஆம் மற்றும் 7ஆம் திகதிகளில் கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை கிரிக்கெட்டுக்கு அண்மைக் காலமாக பல நட்சத்திர வீரர்களைப் பெற்றுக் கொடுத்த இத்தொடரின் மூலம் இலங்கை தேசிய அணிக்குள் இடம்பெற்று குசல் மெண்டிஸ், தனஞ்சய டி சில்வா, நிரோஷன் திக்வெல்ல, பினுர பெர்னாண்டோ ஆகிய வீரர்கள் தற்போது விளையாடி வருவதுடன், இலங்கை 19 வயதிற்குட்பட்ட தேசிய அணியில் சதீர சமரவிக்ரம, அனுக் பெர்ணாந்து மற்றும் பிரியமால் பெரேரா ஆகிய வீரர்களும் விளையாடியமை குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பில் ஊடகங்களைத் தெளிவுபடுத்தும் விசேட செய்தியாளர் மாநாடு கொழும்பில் நடைபெற்றது. இதில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், பிரிமா நிறுவன அதிகாரிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள், பயிற்றுவிப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இப்போட்டித் தொடர் குறித்து இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் உப தலைவர் கே.மதிவாணன் கருத்து வெளியிடுகையில், இலங்கை கிரிக்கெட் எதிர்காலத்துக்கு சிறந்த வீரர்களை உருவாக்குவதே எமது நோக்கமாகும். இதன்படி இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பங்களிப்புடன் 15 வயதிற்குட்பட்ட பாடசாலை வீரர்களுக்கான பிரிமா கிண்ண கிரிக்கெட் தொடர் ஒவ்வொரு வருடமும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆஸ்திரேலிய நீச்சல் வீரருக்கு 12 மாதம் தடை!

ஊக்க மருந்து விதிமுறைப்படி ஆஸ்திரேலிய வீரர் ஜெரார்ட் பூர்ட் தனது இடத்தைக் குறிப்பிடாததால் 12 மாதம் தடைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் முன்னணி நீச்சல் வீரர் ஜெரார்ட் பூர்ட். இவர் லண்டனில் 2012இல் நடைபெற்ற ஒலிம்பிக் தொடரில் 1,500 மீற்றர் நீச்சல் போட்டியில் கலந்து கொண்டார். கடந்த ஆண்டு நடைபெற்ற ரியோவிலும் கலந்து கொண்டார். 900 மீற்றர் வரை முதல் இடத்தில் வந்த பூர்ட், அதன் பின்னர் பின்தங்கி இறுதியில் 20 ஆவது இடத்தைப் பிடித்தார்.

நீச்சல் குளத்தில் நிரப்பப்பட்ட தண்ணீரின் நிறம் மாறியதே தனது தோல்விக்குக் காரணம் என குற்றச்சாட்டு எழுப்பினார். ஆனால், அந்த குற்றச்சாட்டு தள்ளுபடி ஆனது. தற்போது அவருக்கு ஆஸ்திரேலிய நீச்சல் பெடரேசன் தலைமைச் நிர்வாகி மார்க் அண்டர்சன் 12 மாதம் தடை விதித்து உத்தரவிட்டுள்ளார்.




சர்வதேச போட்டிகளில் விளையாடும் வீரர்கள் ஊக்கமருந்து விதிமுறைப்படி எங்கிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து, ஊக்க மருந்து சோதனைக்கு ஒத்துழைக்க வேண்டும். ஆனால், மூன்றுமுறை பூர்ட் எங்கிருக்கிறார் என்ற விவரத்தை தெரிவிக்கத் தவறிவிட்டார். இதனால் அவர் 12 மாத தடைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

# யாழின் கில்லாடி உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்





(கங்கா)

அரியாலைசரஸ்வதிவிளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில், யாழின் கில்லாடி என்னும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று கடந்த 10 ஆம் திகதி முதல் அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 32 கால்பந்தாட்ட அணிகள் பங்குபற்றுகின்றன. அணிகள் ஏ, பி என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நொக்கவுட் முறையில் நடைபெற்று வருகின்றன.

நடைபெற்று முடிந்த போட்டிகளில், ஆனைக்கோட்டை யூனியன் அணி 4:0 என்ற கோல்கள் கணக்கில் கரணவாய் கொலின்ஸ் அணியை வென்றது. நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம் 3:0 என்ற கோல்கள் கணக்கில் சென். மைக்கல் அணியை வென்றது. ஊரெழு றோயல் அணி 1:0 என்ற கோல் கணக்கில் விக்னேஸ்வரா அணியை வீழ்த்தியுள்ளது.




# ஆப்கான் கிரிக்கெட் அரங்குக்கு வெளியே குண்டு தாக்குதல்!

## சனத், மஹ்ரூப் உட்பட இலங்கையர் நால்வருக்கும் ஆபத்தில்லை



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் அமைந்துள்ள சர்வதேச கிரிக்கெட் அரங்குக்கு வெளியே பாதுகாப்புச் சோதனைச்சாவடியில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டனர். 12 பேர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தத் தாக்குதலின்போது இலங்கையைச் சேர்ந்த சனத் ஜயசூரிய, பெர்வீஸ் மஹ்ரூப், ஆஷான் ப்ரியஞ்சன், க்ரேம் லெப்றோய் ஆகியோரும் நேர்முக வர்ணனையாளர் டீன் ஜோன்ஸும் அரங்கில் இருந்துள்ளனர். அவர்களுக்கு எவ்வித ஆபத்துமில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவரும் தெரிவுக்குழுத் தலைவருமான சனத் ஜயசூரியவும் முன்னாள் சகலதுறை வீரர் பெர்வீஸ் மஹ்ரூப்பும் நாடு திரும்பியுள்ளனர். எனினும், கிரிக்கெட் வீரர் ஆஷான் ப்ரியஞ்ன், கிரிக்கெட் பொது மத்தியஸ்தர் க்ரேம் லெப்றோய் ஆகிய இருவரும் தொடர்ந்தும் ஆப்கானிஸ்தானில் தங்கி இருக்கின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானில் ஷ்பாகீஸா கிரிக்கெட் லீக் என்ற பெயரிலான உள்ளூர் இருபது 20 கிரிக்கெட் போட்டி நடைபெற்றுவருகின்றது. கடந்த 11ஆம் திகதி ஆரம்பமான இப் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இப் போட்டியில் ப்ரியஞ்சன் விளையாடுவதுடன் பொது மத்தியஸ்தராக லெப்றோய் செயற்படுகின்றார்.

ஆஸ்திரேலியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரர் டீன் ஜோன்ஸ் வர்ணனையாளராகச் செயற்படுகின்றார்.

இந்தத் தாக்குதல் நடைபெற்றபோது போட்டியில் இடைவேளை வழங்கப்பட்டிருந்ததுடன் வீரர்கள் மைதானத்தில் இருக்கவில்லை.

ஆப்கானிஸ்தானின் உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை, சிம்பாப்வே, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகள் உட்பட வெளிநாடுகள் பலவற்றிலிருந்து கிரிக்கெட் வீரர்கள் விளையாடிவருகின்றனர். விளையாட்டரங்கை நோக்கிச் சென்ற தற்கொலைக் குண்டுதாரி பாதுகாப்பு சோதனைச்சாவடியில் நிறுத்தப்பட்டதை அடுத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக நம்பப்படுகின்றது.

இந்தத் தாக்குதலின் சூத்திரதாரி யார் என்பது வெளிவரவில்லை. அத்துடன், தாக்குதலுக்கு பொறுப்பாளி யார் என்பதுவும் தெரியவரவில்லை. ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சிக் காலத்தில் 1996 முதல் 2001 வரை கிரிக்கெட் விளையாட்டு தடைசெய்யப்பட்டிருந்தது. அதன் பின்னர் கிரிக்கெட் புத்துயிர் பெற்றதுடன் இவ் வருடம் ஆப்கானிஸ்தானுக்கு டெஸ்ட் அந்தஸ்தும் வழங்கப்பட்டது.

# இலங்கைக்கு உலகக் கிண்ணத்தில் வாய்ப்பா?

மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அயர்லாந்து அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் நடைபெறவிருந்த ஒருநாள் போட்டி மழை காரணமாக இரத்து செய்யப்பட்டது. இதனால், இலங்கை 2019ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கு நேரடியாகத் தகுதி பெறுவதற்கான வாய்ப்பு சற்றுப் பிரகாசமாகியுள்ளது.

இங்கிலாந்தில் 2019ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடரானது 10 அணிகள் மட்டுமே போட்டியிடும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

போட்டியை நடத்தும் இங்கிலாந்து தவிர்த்து, 2017 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி வரையில், ஒருநாள் தரவரிசையில் முதல் 8 இடங்களில் இருக்கும் பிற அணிகள் உலகக் கிண்ணத்திற்கு நேரடித் தகுதி பெறும். மீதமுள்ள இரண்டு இடங்களுக்கு மற்ற அணிகள் தகுதிச் சுற்றில் விளையாடித் தகுதி பெற வேண்டும்.

இந்தியா, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய அணிகள் உலகக் கிண்ணத்திற்கு ஏற்கனவே நேரடித் தகுதி பெற்றுவிட்டன.

செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி நிலைவரப்படி இலங்கை 86 புள்ளிகளுடன் 8ஆவது இடத்திலும், மேற்கிந்தியத்தீவுகள் 78 புள்ளிகளுடன் 9ஆவது இடத்திலும் இருக்கின்றன. இங்கிலாந்துக்கு எதிரான தொடரின் முடிவில் இலங்கையைத் தரவரிசையில் முந்தினால் மட்டுமே மேற்கிந்தியத் தீவுகள் அணியால் நேரடித் தகுதி பெற முடியும்.

தற்போது அயர்லாந்துடனான போட்டி நடைபெறாததால் இங்கிலாந்துக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை மேற்கிந்தியத்தீவுகள் முழுமையாக வெல்ல வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# 2019 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் டோனி: கூறுகிறார் ரவிசாஸ்திரி

2019ஆம் ஆண்டு உலக கிண்ணத்தொடரில் டோனி விளையாடுவார் என இந்திய அணியின் பயிற்சியாளரும், முன்னாள் தலைவருமான ரவிசாஸ்திரி தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மகேந்திரசிங்டோனி. இரண்டு உலககோப்பையை (2007இல் 20 ஓவர், 2011இல் 50 ஓவர்) இந்தியாவுக்கு பெற்றுக் கொடுத்து பெருமை சேர்த்த அவர் தற்போது ஒருநாள் போட்டியிலும் 20 ஓவர் போட்டிக்கான அணி யிலும் ஆடி வருகின்றார்.

36 வயதான டோனி 2019 ஆம் ஆண்டு உலகக் கிண்ண அணியில் இடம் பெறுவாரா? என்பது தான் அனைவராலும் எதிர்பார்க்கப்படும் கேள்வியாகும்.

ஏற்கனவே, யுவராஜ் சிங்கை தேர்வுக் குழு கழற்றி விட்டுவிட்டது. அவர்களுக்கு




அடுத்த இலக்கு டோனியாக இருக்கலாம். ஆனால், டோனி இலங்கை தொடரில் மிகவும் சிறப்பாக விளையாடி அனைவரது நம்பிக்கையையும் பெற்றுள்ளார். அவர் 4 ஆட்டங்களில் விளையாடி ஒரு அரை சதம் உட்பட 162 ஓட்டங்களை எடுத்துள்ளார். மேலும் ஒரு நாள் போட்டியில் 100 முறை ஸ்டம்பிங் செய்த முதல் வீரர் என்ற வரலாற்றுப் பெருமையையும் பெற்றுள்ளார்.

## இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகாராஷ்டிரா மாநிலத் தில் நடைபெறும் பௌத்த நிகழ்வில் பங்கேற்பதற்காக வரும் மஹிந் தவை டில்லி அரசின் உயர்மட்ட அதிகாரிகள் சந்திக்கவிருந்தனர். மஹிந்தவை நேரடியாக உத்தி யோகபூர்வமாக அழைத்தால் அது நெருக்கடியாக அமையுமெ ன்பதாலேயே பிராந்திய அரசு ஊடாக மகிந்தவை அந்த நாடு அழைத்திருந்தது என செய்தி ஏடு கள் தகவல் வெளியிட்டன.

டில்லி செல்வதற்கு முன்னர் மஹிந்தவை தாம் அழைத்துப் பேசினால் அது இந்தியாவுக்கும், இலங்கைக்கும் விடுக்கப்படும் மறைமுக எச்சரிக்கையாக அமை யுமென்றே பீஜிங் கருதுகின்றது. சீனாவின் கொண்டாம் மாநிலத்தில் நடைபெறும் வர்த்தகக் கண் காட்சிக்கு தலைமை அதிதியாக மஹிந்தவை அழைக்குமாறு மாநில அரசுக்கு சீனாவின் நடு வண் அரசின் வெளியுறவு பிரிவு அறிவித்துள்ளதாகக் கூறப்படு கின்றது.

இதன்படி எதிர்வரும் 21ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ பீஜிங் செல்லவுள்ளார். 24ஆம் திகதி வரை அங்கு தங்கியிருந்து அரசி யல் ரீதியில் முக்கிய சந்திப்பு களை அவர் நடத்தவுள்ளார். பீஜிங்கின் இந்தத் திடீர் இராஜ தந்திர நடவடிக்கை டில்லியை சீற்றமடையச் செய்துள்ளதாகத் தெரியவருகின்றது. (உ)

## இலங்கையில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலுப்படுத்தும் வகையில் இந் தப் பயிற்சிகள் ஒழுங்கு செய் யப்பட்டுள்ளன.

அனைத்துலக கருத் தரங்கு, பல்வேறு நாடுகளில் அனர்த்த மீட்பு மற்றும் மனிதாபிமான உத விகள் தொடர்பான நடவடிக் கைகளை ஒரே மேசையின் மீது இருந்து வழிநடத்தும் கட்டளை நிலைய பயிற்சி, அனர்த்த மீட்பு, பாரா சூட் தரையிறக்கம், பொதி கள் தரையிறக்கம் போன்றவற்றை உள்ளடக்கிய பறப்புப் பயிற்சி ஒத்திகை, பறந்து கொண்டிருக்கும் சி-130 விமானத்தில் கட்டளை மையப் பயிற்சி என் பன வற்றை உள்ளடக்கியதாக இந்த நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

கட்டளை மைய பயிற்சிகள் ஜெட்விங் விடுதியிலும், பறப்பு பயிற்சி ஒத்திகை கட்டுநாயக்க விமானப் படைத்தளம் ஆகிய வற்றிலும் இடம்பெற்றன.

இதில் அமெரிக்கா, இந் தோ னேசியா, பங்களாதேஷ், ஜப்பான், லாவோஸ், மலேசியா, மொங்கோ லியா, நேபாளம், பிலிப் பைன்ஸ், தாய்லாந்து, ஆஸ்திரேலியா, வியட்நாம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் விமானப்படை அதிகாரிகள் பங்கேற்கின்றனர்.

இந்தப் பயிற்சிகளில் பங் கேற்பதற்காக அமெரிக்க விமா னப்படையின் C-130H இராட்சத விமானங்கள் இரண்டு கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்துள் ளன. இவற்றுடன் இணைந்து, இலங்கை விமானப்படையின் C-130H மற்றும் AN-36 விமா னங்கள் நேற்று முன்தினம் பறப்புப் பயிற்சி ஒத்திகைகளில் பங்கேற்றன.

நேற்று அம்பாறை விமானப் படைத்தளத்தை அண்டிய பகுதி யில், அமெரிக்க விமானப் படையின், C-130H விமானத் தில் இருந்து கொமாண்டோக் களை பாராசூட் மூலம் தரையிறக்கு தல் மற்றும் பொதிகளை தரை யிறக்குதல் பயிற்சி கள் நடத்தப் படவிருந்தன.

எனினும், நேற்று வானிலை ஒத்துழைக்காததால், இன்று இந்த தரையிறக்கப் பயிற்சிகள் அம் பாறையில் நடைபெறவுள்ளன.

## 2020 இல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

20 ஆயிரம் ரூபாவாகவும் சாதா ரண சாரதி ஒருவரின் அடிப்படைச் சம்பளம் 28 ஆயிரம் ரூபாவாக வும் அதிகரிக்கும் என அமைச் சர் தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்க 2020 இல் அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு மேலதிகமாக 3கோடி ரூபாவை அரசாங்கம் ஈட்ட வேண்டியிருக்கும் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள், அபிவி ருத்தி அதிகாரிகள், கிராம உத்தி யோகத்தர்கள் ஆகியோருக்கு அரசாங்கத்தின் வேலைத்திட் டங்கள் தொடர்பில் அறிவுத்தும் நிகழ்வு அலரி மாளிகையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச ஊழியர்களுக்கான சம் பளத்தை இதுவரை எந்தவொரு அரசாங்கமும் நினைத்து பார்க்க முடியாத அளவிற்கு அதிகரித் தோம். இதன்படி 10 ஆயிரம் ரூபா சம்பளம் அதிகரிக்கப்பட்டது.

அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வின் பிரகாரம் அரச ஊழியர்களுக்கான சம்பளம் 2020 ஆம் ஆண்டு ஆகும் போது பன்மடங்காக அதிகரிக் கும். - என்றார் அவர்.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலகச் சட்ட மூலம் அண்மையில் நிறைவேற் றப்பட்டுள்ளது. அது மிகவும் பயங்கரமான சட்டம்.

முன்னாள் இராணுவத்தளபதி ஜகத் ஜெயசூரியவிற்கு எதிராக பிரேஸில் நாட்டில் அரச சார்பற்ற நிறுவனங்களால் வழக்குத் தாக் கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் அவ்வாறான வழக்கை தாக்கல் செய்வதற்கு இலத்தீன் அமெரிக்க நாடுகளான ஆர்ஜன்டினா, கொலம்பியா, பேரு ஆகியனவும் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

இந்த நிலையிலேயே வலுக் கட்டாயமாக காணாமலாக்கப் படுவதிலிருந்து பாதுகாத்தல் பற்றி 'சர்வதேச சமவாய' சட்ட மூலம் எதிர்வரும் 21ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதத் திற்கு எடுக்கப்படவுள்ளது.

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பிலான அலுவலக சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டுள்ள காரணத்தினாலேயே இந்தச் சர்வதேச சமவாய சட்டமூலத்தை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க் கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்தால் பிரேஸி லில் ஜகத் ஜெயசூரியவிற்கு எதி ராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கிற்கு ஏற்புடைய சாட்சி களைத் தயாரிக்கும் விடயங்கள் உள்ளக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இந்த சட்டமூலத் தின் எட்டாம் உறுப்புரையில் *'குற் றச்சாட்டை முன்வைக்கும் அர சாங்கம் அல்லது அந்த அரசாங் கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகளின் நாடுகளுக்கு குற்றம் சாட்டப்படும் நபர்களை விசாரணைக்கு அனுப்ப வேண் டும்'* எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் இலங்கை இரா ணுவத்தினரை சர்வதேச நீதிபதி கள் முன்னிலையில் விசார ணைக்கு உட்படுத்துவதற்கு ஏற்ற வகையில் இந்தச் சட்டமூலம் காணப்படுகின்றது. தற்போது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள ஜகத் ஜெயசூரியவுக்கு இது மேலும் சிக்கல்களை ஏற்படுத்தும். குறிப் பாக இந்தச் சட்டமூலம் சர்வதேச அழுத்தத்தின் பேரிலேயே நாடா ளுமன்றில் விவாதத்திற்கு எடுத் துக்கொள்ளப்படவுள்ளது - என் றார் அவர்.

# கருணாவுக்குப் போலிக் கடவுச்சீட்டு வழங்கிய விடயம் மீண்டும் சூடுபிடிப்பு

கொழும்பு, செப். 16

முன்னாள் பிரதியமைச்சர் கருணா அம்மானுக்கு போலியான ராஜதந்திர கடவுச்சீட்டு வழங்கப்பட்ட விவகாரம் மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

கடந்த 2006ஆம் ஆண்டு கருணா அம்மான் எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் போலி ராஜ தந்திர கடவுச்சீட்டில் இங்கிலாந்து சென்ற பின்னர் அந் நாட்டு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

சிறிது காலம் விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவர் பின்னர் நாடு கடத்தப்பட்டிருந்தார். இது தொடர் பான வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத் துக் கொள்ளப்பட்ட போது கருணா அம்மான் போலி கடவுச்சீட்டில் இங்கிலாந்து சென்றதன் மூலம் குடி வரவு மற்றும் குடியகல்வு சட்டங்களை மீறினாரா என்பது குறித்து அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கு மாறு சி.ஐ.டியினருக்கு கொழும்பு பிரதான மாஜிஸ் திரேட் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் கருணா அம்மானின் சொந்தப் பெய ரான விநாயகமூர்த்தி முரளிதரன் (அடையாள அட்டை இலக்கம்- 66312346V) மற்றும் அவர் போலிக் கட வுச்சீட்டு பெறப் பயன்படுத்திய துஷ்மந்த குணவர்த்தன (அடையாள அட்டை இலக்கம்- 611405138V) ஆகிய பெயர்களில் கடன் அட்டைகள் வழங்கப்பட் டுள்ளனவா என்பது குறித்து தகவல் அளிக்குமாறு இலங்கையின் ஏழு நிதி நிறுவனங்களுக்கும் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதற்கிடையே கருணா அம்மானின் போலி ராஜ தந்திர கடவுச்சீட்டை தயாரிப்பதில் முன்னைய அர சாங்கத்தின் முக்கியஸ்தர்கள் மற்றும் குடிவரவு தி ணைக்கள அதிகாரிகள் ஆகியோரும் உடந்தையாக இருந்துள்ளனர் எனப் பொலிஸார் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை வெளி நாட்டு அமைச்சின் உதவியுடன் பெற்று விசாரணை களை முன்னெடுக்குமாறு நீதிபதி லால் ரணசிங்க பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களுக்கு மைத்திரி நியாயம் வழங்குவார் என்கிறார் மகள்

தனது தந்தையும், ஜனாதிபதி யுமான மைத்திரிபால சிறிசேன வடக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயத்தைப் பெற் றுக்கொடுப்பார் என அவரின் மகள் சதுரிக்கா சிறிசேன நம் பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி பல தடவைகள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற் கொண்டு அந்த மக்களின் பிரச் சினைகள் தொடர்பில் அறிந்து கொண் டுள்ளார் எனவும் அவர் கூறினார்.

ஊடகவியலாளர்கள் சிலரை சந்தித்த சதுரிக்கா சிறிசேன ஊடக வியலாளர்கள் எழுப்பிய கேள்வி களுக்குப் பதிலளித்தார்,

"வடக்கில் யுத்தத்தால் நிறைய பெண்கள் பாதிப் புக்களை எதிர் நோக்கியுள்ளனர். உங்கள் தந்தை 2015ஆம் ஆண்டு முழு நாட்டிற் கும் ஜனாதிபதியானார். பெண் செயற்பாட்டாளர் என்றவகையில், உங்கள் தந்தை அந்தப் பெண் களுக்கு நியாயத்தை பெற்றுக் கொடுப்பார் என நம்புகின்றீர் களா?" - என தமிழ் ஊடகவியலா ளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலிளிக்கையில் அவர் மேற்படி விடயங்களைக் குறிப்பிட்டார்.

"அவர் அந்த மக்களுக்கு நியாயத்தை வழங்குவார் என நான் நினைக்கின்றேன். எனது தந்தை யாழ். மாவட்டத்திற்கே விஜயம் மேற்கொள்கின்றார். அந்த மக்களைச் சந்தித்து அவர் களது பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்துகின்றார். அவர் கள் இழப்புகள், பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வை வழங்குவார் என்பது எனது நம்பிக்கை. போதைப்பொருள் தொடர்பில் பேசுகின்றார். அது தொடர்பில் தெளிவுபடுத்தல்களை முன்னெடுக் கின்றார். ஆகவே தமிழ், சிங்களம் மற்றும் முஸ்லிம்கள் என இனம், நிறம் பாராது அவர் பணியாற்று வார் என்பது எனது நம்பிக்கை. - என்றார் சதுரிக்கா.

## தமிழர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ்.பல்கலைக்கழகத்திலும் தியாக தீபத்தின் நினைவு நிகழ்வு களும் அஞ்சலிகளும் உணர்வு பூர்வமாக முன்னெடுக்கப்பட்டன. நினைவேந்தல் நிகழ்வுகளில் மாணவர்கள் பெரும் எண்ணிக் கையில் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவு, புதுக்குடியி ருப்பு, மன்னார், வவுனியா, மட்டக் களப்பு மாவட்டங்களிலும் திலீ பனின் 30ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று ஆரம்பமா கின என அங் கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ)

## கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது கிழக்குச் செய்தியா ளர்கள் தெரிவித்தனர்.

இருபதாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாயின் சர் வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற தீர்ப்பை உயர்நீதி மன்றம் வழங்கியுள்ளது என்ற செய்தியை உறுதிப்படுத்துவதில் அவர்களில் பலரும் ஆர்வமும் ஈடுபாடும் அதிகம் காட்டினர்.

அது உண்மையானால்தான் உடனடியாக மாகாண சபைத் தேர்தலும் சாத்தியமாகும் என்ப தால் அதனை உறுதிப்படுத்து வதில் அவர்கள் அதிகம் கரிசனை காட்டினர்.

இதற்கிடையில் -

கிழக்கு மாகாணசபைத் தேர் தல் உடனடியாக நடக்கும் சாத்தி யம் தென்படுவதால் அதற்கான வியூகங்கள் அமைப்பது பற்றி பேச்சு கள், தொடர்பாடல்கள், ஊடாட் டங்களை முஸ்லிம் கட்சிகள் பல வும் நேற்றே ஆரம்பித்து விட்டன என்று கிழக்குத் தகவல்கள் தெரி வித்தன.

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் செயலாளர் நாயகம் என்.சிறிகாந்தா.

"கூட்டமைப்பில் இருக்கிறோம். அந்த ஐக்கியத்தைப் பேணி ஒன் றாகத் தேர்தலை எதிர்கொண்டு வடக்கு, கிழக்குத் தமிழர்களின் நலனைப் பாதுகாப்பதே எமது இலக்கு. ஆகவே ஒற்றுமையாக இந்தத் தேர்தலையும் எதிர்கொள் ளும் பொறுப்புள்ளங்களுக்கு இருக் கின்றது." - என்றார் புளொட் தலைவர் சித்தார்த்தன்.

எனினும், நாம் ஒற்றுமை யாகத் தேர்தலை எதிர்கொள்வது, கூட்டமைப்பின் பிரதான பங் காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அணுகு முறைப் போக்கிலும், நடத்தை யிலும் தங்கியிருக்கின்றது என் றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இத்தேர்தல் குறித்து இலங் கைத் தமிழரசுக் கட்சியின் தலை வர் மாவை சேனாதிராசாவிடம் கேட்டபோது - ஐக்கியப்பட்டு நாம் நிற்பது காலத்தின் கட்டாயம், தவிர்க்க முடியாத பொறுப்பு அது என்றார் அவர்.

என்றாலும், அங்கத்துவக் கட்சிகளின் செயற்போக்குகள் குறித்து கூட்டமைப்புத் தலைமை கூடி ஆராயும் என்றும் அவர் சொன்னார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி யின் மத்திய செயற்குழு எதிர் வரும் 23ஆம் திகதி அம்பாறை யில் கூடும்போது அந்தக் கூட்டத் தில் கிழக்கு மாகாணசபைத் தேர் தல் குறித்தும் பிரதானமாக ஆரா யப்படும் என்றார் மாவை சேனாதி ராசா.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம் பந்தனிடம் கேட்டபோது, "தேர்தல் ஒன்று வரும் என்றால் அதனை நாம் எதிர்கொள்ளத்தானே வேண் டும். அது குறித்து நாம் பேசுவோம். எல்லாக் கட்சிகளுடனும் ஆராய் வோம். அவசரப்பட்டு எந்தப் பதி லும் கூறமுடியாது." - என்றார் அவர். (உ)

## 20ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்புக்கான இருபதா வது திருத்தம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு - அல்லது பரிந்துரை - யாழ்ப்பாணத்திலி ருந்து வெளியாகும் 'காலைக் கதிர்' நாளிதழில் நேற்று பிரத்தியே கச் செய்தியாகப் பிரசுரிக்கப்பட்டி ருந்தமை நேற்று முன்னிரவு அலரி மாளிகையில் பிரதமர் தலைமையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டி ருந்ததாகத் தெரியவந்தது.

அதன் பின்னரே நேற்றிரவு 9 மணி முதல் 10.30 மணி வரை ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவின் உத்தியோகபூர்வ இல் லத்தில் மந்திராலோசனைக் கூட் டம் நடைபெற்றது.

உயர்நீதிமன்றத் தீர்ப்பு வெளி யாகிவிட்ட நிலையில் - அதனடிப் படையில் - மூன்று மாகாண சபை களுக்கான தேர்தல்களையும் உடன் நடத்த வேண்டிய சூழ்நிலை குறித்து இந்த மந்திராலோச னைக் கூட்டத்தில் ஆராயப்பட் டதாகத் தெரிகின்றது.

இந்தக் கூட்டத்தில் ஜே.வி. பியின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர் என்று சில வட்டாரங் கள் தெரிவித்தன.

உயர்நீதிமன்றத் தீர்ப்பை அனுசரித்து, அதேவேளை, புதிய முறையீடுகள் மற்றும் மாற்றங் கள் மூலம் மீண்டும் ஒரு முறை இருபதாவது திருத்தத்தை வேறு வடிவில் சமர்ப்பித்து, சர்வஜன வாக்கெடுப்பின்றி விடயத்தை நகர்த்தலாமா என்ற ஒரு கேள்வி நேற்றைய கூட்டத்தில் முன்வைக் கப்பட்டது என்றும் -

ஆனால் அது நடைமுறைச் சாத்தியமற்றது எனச் சுட்டிக்காட் டப்பட்டதால் அத்தகைய முயற்சி எதனையும் எடுப்பதில்லை என்று உறுதியாகத் தீர்மானிக்கப்பட்டது என்றும் அறியவந்தது.

அந்தப் பின்புலத்தில் இனி நடத்தப்பட வேண்டிய மூன்று மாகாண சபைத் தேர்தல்களை எப் போது நடத்துவது, உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்னரா, பின்னரா அல்லது இரண்டையும் - அதாவது நாடு முழுவதிலும் உள்ளூராட்சி சபைகளுக்கும் அதேசமயம் மூன்று மாகாண சபைகளுக்கும் - ஒரே சமயத்தில் தேர்தல் நடத்தலாமா என்பது குறித் தும் விரிவாகக் கலந்துரை யாடப் பட்டதாகத் தெரியவந்தது. (உ)

### பௌத்த தர்மத்தின் வளர்ச்சிக்கு ‘சில்’ துணி வழங்கி உதவியமைக்காகவே

# சிறைக்குச் சென்று வாடுகின்றனர் வீரதுங்க, பெல்பிட்ட இருவரும்!

கொழும்பு, செப். 16

பௌத்த தர்மத்தின் வளர்ச்சிக்குசில்துணிவழங்கியமைக்காகவே லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி விசேட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டதே ஒழிய தேர்தலை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படவில்லை.

வாக்காளர்களுக்கு அன்றி விகாரைகளுக்கே சில் துணிகள் பகிரப்பட்டன. அப்படியெனில் பாடசாலை சீருடை வழங்குவதன் ஊடாக தேர்தல் பெறுபேறுகளில் மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா? என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும், அதிகாரத்தைப் பயன்படுத்தி சுய இலாபத்திற்காக அன்றி ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையின் உத்தியோக பூர்வ உத்தரவை அமுல்படுத்தும் அரச அதிகாரிகளைப் பாதுகாப்பது அரசின் பொதுக் கொள்கையாக இருக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோர் தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தொலைத்தொடர்பு கண்காணிப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான 60கோடி ரூபாவை ஜனாதிபதி செயலக கணக்கிற்கு பெற்று பௌத்த விகாரைகளுக்கு சில் துணி வழங்கியமைக்காக முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித்வீரதுங்கமற்றும்தொலைத் தொடர்பு கண்காணிப்பு ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்கு மூன்றாண்டு சிறைத் தண்டனையும் ஒருவருக்கு தலா 20 லட்சம் ரூபா தண்டமும் 5 கோடி ரூபா நட்டஈடும் வழங்க வேண்டும் எனக் கூறி மேல் நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த தீர்ப்பு வந்த கையோடு நாட்டு மக்கள் ஆச்சரியம் அடைந்தனர். இது தொடர்பில் பலர் என்னிடம் கேட்டறிந்தனர். எனினும், இந்தப் பணத் தொகையை எக்காரணம் கொண்டும் தமது சொந்தத் தேவைகளுக்கு இவர்கள் இருவர் பயன்படுத்தவில்லை எனத் தீர்ப்பின் மூலம் ஊர்ஜித



## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

மாகியுள்ளது. ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ உத்தரவையே இவர்கள் செயற்படுத்தியுள்ளனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு ஜனாதிபதி விசேட அபிவிருத்தித் திட்டங்களின் பிரகாரமே சில் துணி பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி விசேட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் போயா தினங்களில் பௌத்த மத பக்தர்களுக்கு உதவி வழங்கும் நோக்குடனே இந்தத் திட்டத்தை இவர்கள் நடைமுறைப்படுத்தியுள்ளனர்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்குகணினி வழங்குவதும் விசேட திட்டங்களில் ஒன்றாகும். ஜனாதிபதி தேர்தல் அறிவிப்புக்கு முன்பே இந்தத் திட்டம் உத்தேசிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்திற்கு ஜனாதிபதி செயலகத்தின் மதவிவகார தொடர்பாடல் செயலாளர் வண. வடினாபஹ சோமனந்த தேரரே பொறுப்பாளராக இருந்து வந்தார். அத்துடன், பொருளாதார அபிவிருத்தி அமைச்சே அதைக் கண்காணித்தது.

இதன்படி, சில்துணி பகிர்ந்தளிக்கும் முகவர்களின் ஊடாகப் பிரதேச செயலகத்தின் பிரதான விகாரையொன்றுக்கு இந்த சில் துணிகள் வழங்கப்பட்டு, அதன்பின்னர் பிரதான விகாரைகளின் ஊடாக சிறிய விகாரைகளுக்கு அவற்றைப் பெற்றுகொடுப்பதே திட்டத்தின் செயல் முறையாக காணப்பட்டது.

இது 11 ஆயிரத்து 21 விகாரைகளை ஒன்றிணைத்து முன்னெடுக்கப்பட்ட திட்டமாகும். இதன்போது வாக்காளர்களுக்கு அன்றி விகாரைகளுக்கே சில் துணி பகிர்ந்தளிக்கப்பட்டது என்பதைகூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

எனினும், சில் துணி வழங்கப்படுவதே எமது பொறுப்பாகும். அதனை யாருக்கு வழங்க வேண்டும், எப்போது வழங்க வேண்டும் என்பதனை விகாராதிபதியே தீர்மானிக்க வேண்டும். இதன்போது குறித்த நேரத்தின்போதே வழங்கப்பட வேண்டும் ஜனாதிபதி செயலகத்தால் எந்த வோர் ஆலோசனையும் வழங்கப்படவில்லை.

அரசியல் நோக்கங்களுக்காக சில் துணிகள் பகிர்ந்தளிக்கப் படவில்லை. பாடசாலைகளில் வருட இறுதியில் பாடசாலை சீருடை வழங்கப்படுவது வழக்கமாகும். இந்த பாடசாலை சீருடை வாக்குகளைப் பெறுவதற்கு வழங்கப்படுவது என்று கூறுவது வேடிக்கையானது. இதனால் வாக்கு பெறுபேறுகளை மாற்றியமைக்கமுடியுமா? அதுபோலவே சில் துணி பகிர்ந்தளிப்பை அரசியலாக்க முடியாது.

அதேபோன்று, இந்த சில் துணியில் மஹிந்த ராஜபக்ஷ உருவம் பொறிக்கப்பட்ட ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருந்ததாக வழக்கின் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. சில் துணி எங்கிருந்து கிடைக்கின்றது என்பதை மக்கள் அறிந்து கொள்வதற்காகவே அந்த ஸ்டிக்கர் ஒட்டப்பட்டது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த 1981 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் சட்ட மூலத்தின் ஷரத்துகளுக்கு முரணான வகையில் சில் துணி பகிர்ந்தளிக்கவில்லை. கட்சி பேதங்கள் பாராமல் அனைத்து பௌத்த பக்தர்களுக்கே சில் துணி வழங்கப்பட்டிருந்தது. எனினும் மேல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும் போது இந்த வழக்கின் குற்றம் சரியான முறையில் இனங் காணப்படவில்லை.

மேலும் ஜனாதிபதி விசேட அபிவிருத்தித் திட்டத்திற்கு 2014 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட 100 கோடி ரூபாவில் 40கோடி ரூபா கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு ஒதுக் கப்பட்டமையால் நிதிப் பற்றாக்குறை காரணமாக தொலைத்தொடர்பு கண்காணிப்பு ஆணைக்குழுவிடம் நிதி கோரப்பட்டது.

இதற்கு ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையும் அனுமதி வழங்கியது. இதன்படி, 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி ஜனாதிபதி செயலக கணக்கிற்கு 60கோடி ரூபா வைப்பு செய்யப்பட்டது.

எனவே, இவ்வாறான முன் உதாரணங்களின் ஊடாக எதிர்காலத்தில் அரச ஊழியர்கள் தன்னுடைய நியாயத்தை உறுதிப்படுத்த முடியாமல் போய்விடும். இந்த வழக்கில் தொலைத் தொடர்பு கண்காணிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபை அனுமதித்த விடயம் வழக்கின் தீர்ப்பில் எடுத்துக் கொள்ளப் படவில்லை.

அரசமைப்பில் 9 ஆவது ஷரத்தின்படி, பௌத்த தர்மத்தைப் பாதுகாத்தல் மற்றும் வளர்ச்சிக்குட்படுத்தல் என்பதன் பிரகாரம் அரசின் தலைவர்என்றவகையில் ஜனாதிபதி விடுத்த உத்தரவைப் பின்பற்றியமைக்கே லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதனைத் தவிர எந்தவோர் ஊழல் மோசடிக்கும் உடந்தையாகவில்லை என்பது ஊர்ஜிதமாகியுள்ளது.

எனவே, அதிகாரத்தை பயன்படுத்தி சுய இலாபத்திற்காக அன்றி ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையின் உத்தியோகபூர்வ உத்தரவை அமுல்படுத்தும் அரச அதிகாரிகளைப் பாதுகாப்பது அரசின் பொது கொள்கையாக இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(க)

## நூல் அறிமுக நிகழ்வு நாளை புத்தூரில்!

புத்தூர், செப்.16

புதிய நீதி வெளியீட்டகத்தின் ஏற்பாட்டில் சி.கா.செந்திவேல் எழுதிய ‘வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை’ என்ற அரசியல் பகுப்பாய்வு விமர்சன நூல் அறிமுக நிகழ்வு நாளை ஞாயிறு மாலை 4 மணியளவில் புத்தூர் மேற்கில் உள்ள கலைமதி மக்கள் மண்டபத்தில் இடம் பெறும்.

கா.செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், அறிமுக உரையை சட்டத்தரணி சோ. தேவராஜாவும் நூல் மதிப்பீட்டுரைகளை எழுத்தாளர் க. தணிகாசலமும் த.நவதாசனும் ஆற்றுவர். (இ)

## மண்டலாபிஷேக பூர்த்தி விழா நாளை

காரைநகர், செப்.16

காரைநகர் தங்கோடை ஸ்ரீ நாகபூசணி அம்மனின் மண்டலாபிஷேகப் பூர்த்திப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 1008 சங்காபிஷேகத்துடன் நிறைவு பெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு பூசை ஆரம்பமாகி முற்பகல் 11 மணிக்கு சங்காபிஷேகமும் தொடர்ந்து விசேட பூசையும் மாலை 4.30 மணிக்கு பூசை ஆரம்பமாகி இரவு 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசை, திருவூஞ்சல் இடம்பெற்று இரவு 8 மணிக்கு விசேடமாக அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் அம்பாள் வீதியுலா வலம் வரும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (இ)

## காரைநகரில் நாடக விழாவும் போட்டியும்

சுவிஸ் காரை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் நாடகவிழாவும் போட்டியும் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் மாலை 4 மணிக்கு காரைநகர் இந்துக் கல்லூரி நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறும். நாடக விழாவில் ‘‘திருந்துவார்களா’’, ‘‘வெல்க மானுடம் செல்லரித்தவாழ்வின்விழிம்பில்’’,‘‘காலனை வென்ற கற்புக்கரசி’’ என்ற தலைப்பிலான நாடகங்கள் மேடையேற்றப் படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# சைவபரிபாலனசபை நடத்தும் சைவ மாநாடு நேற்று ஆரம்பம்














யாழ்.சைவபரிபாலன சபை நடத்தும் 'அகில இலங்கை சைவ மாநாடு' நேற்று வண்ணை சிவன் கோவிலிலிருந்து ஊர்வலத்துடன் ஆரம்பமானது. சபை மண்டபத்தில் மாநாடு நடைபெறுகிறது. அந்நிகழ்வுகளின் பதிவுகள் இவை.

## துன்னாலையில் மூவர் கைது



வடமராட்சி, செப். 16

வடமராட்சிதுன்னாலையில் நேற்று அதிகாலை மூவர் இலங்கைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

வடமராட்சி கிழக்கில் சில மாதங்களுக்கு முன்னர் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டவேளை மணலுடன் வந்த டிப்பர் ரக வாகனம் நிறுத்தப்படாமையால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

இச்சம்பவத்தின் பின்னர் ஏற்பட்ட வன்முறையில் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே இந்த நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறைப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலைய டுத்தே இக்கைது இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ். இந்துவை 5 விக்கெட்டுகளால் வென்றது ஆனந்தாக் கல்லூரி



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு ஆனந்தாக் கல்லூரிக்கும் இடையில் நேற்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற – ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் – ஆட்டத்தில் ஐந்து விக்கெட்டுகளினால் ஆனந்தாக்கல்லூரிவெற்றி பெற்றது.

இந்த ஆறாவது வருடாந்தப்போட்டியில்முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணி 46 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 130ஓட்டங்களைப்பெற்றது.

ஜி.சந்தோஷ் 20, கஜநாத் 52 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஹசிடு 3 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், ஷமால் 8 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஆனந்தாக் கல்லூரி அணி 27.1 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 131 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றியீட்டியது.

கனிஷ் 17, கவிந்து 27, லாஹிரு ஆட்டமிழக்காமல் 34, ருஷான் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் சந்தோஷ் 20ஓவர்களுக்கு 2விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.




இலங்கை மெதடிஸ்த திருச்சபைக்கான பேராயர் பேரருள் ஆசிரி பிரியலால் பெரேரா ஆண்டகை மன்னாருக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டபோது மன்னார் மெதடிஸ்த முகாமைத்துவ அருட்பணி ரவி முருகேஸ்பிள்ளை தலைமையில் அவருக்கு மன்னார் மெதடிஸ்த ஆலயத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட மடு மாதா சிறிய குருமட இயக்குநரும் மன்னார் பிரஜைகள் குழு தலைவருமான அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார், முன்னாள் மன்னார் பிரஜைகள் குழு தலைவர் அருட்பணி இ.செபமாலை அடிகளார், மன்னார் பத்திரிகை ஆசிரியர் தமிழ்நேசன் அடிகளார், வன்னி எம்.பி.சாள்ஸ் நிர்மலநாதன், மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ஸ்ரனி டீ மெல், மன்னார் மெதடிஸ்த ஆலய அருட்பணி கே.ஜகதாஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர். (உ–112)

## முதலை இழுத்துச் சென்றவரின் உடல் நேற்று மீட்கப்பட்டது



அருகம்பையில் விடுமுறையைக் கழிக்க வந்து முதலைக்கு இரையாகிய பிரித்தானியாவைச் சேர்ந்த இளம் ஊடகவியலாளரின் உடல் நேற்றுப் பகல் மீட்கப்பட்டுள்ளது. இலங்கை கடற்படை மேற்கொண்ட தேடுதலில் பின்னர் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நண்பர்களுடன் அறுகம்பே பகுதிக்குச் சென்றிருந்த இவர், முதலைக் குன்று என அழைக்கப்படும் நீர்ப்பரப்பில் கைகழுவச் சென்ற வேளையே அவரை முதலை இழுத்துச் சென்றதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தில் போல் ஸ்டுவாட் மக்கிளீன் (24 வயது) நிரம்பிய பிரித்தானிய ஊடகவியலாளரே உயிரிழந்தார். (முன்னர் வந்த செய்தி 13ஆம் பக்கத்தில்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.09.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.